# சித்திரவதையற்ற சமுதாயம்

## சித்திரவதை தொடர்பான சட்ட ஏற்பாடு

**சித்திரவதையை கண்காணித்தல் மற்றும் அறிவை விருத்தி செய்யும் செயற்திட்டம்**

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**AusAID** அனுசரணையுடன்

# சித்திரவதையற்ற சமுதாயம்

## சித்திரவதை தொடர்பான சட்ட ஏற்பாடு

சித்திரவதையை கண்காணித்தல் மற்றும் அறிவை
விருத்தி செய்யும் செயற் திட்டம்

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**Aus AID** அனுசரணையுடன்

© இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு

# சித்திரவதையற்ற சமுதாயம்

## சித்திரவதை தொடர்பான சட்ட ஏற்பாடு


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 2003 ஆகஸ்ட் |
| ISBN | : | 955 - 8929 - 01 - 08 |
| தொகுப்பு | : | R.C. கருணாகரன்<br>ஜகத் பண்டார வியனாரச்சி<br>T. கங்காதரன்<br>மேனக திஸாநாயக<br><br>S. ரவீந்திரன்<br>வாசுகி தேவதாஸ்<br>அநுராதா குணரட்ன |
| பதிப்பு | : | பிறின்ட் லைன்<br>58 / 3, டி.எம். கொலம்பகே மாவத்தை,<br>கிருலப்பனை,<br>கொழும்பு 05. |
| வெளியீடு | : | சித்திரவதையை கண்காணித்தல் மற்றும் அறிவை விருத்தி செய்யும் செயற் திட்டம்<br>**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**<br>இல. 36, கின்சி வீதி,<br>கொழும்பு 08. |

# முகவுரை

சர்வதேச மனித உரிமை பிரகடனங்களிலும் சமவாயங்களிலும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படக் கூடாது என்பதுமனித உரிமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருப்பதோடு அவ் உரித்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பில் அடிப்படை உரிமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய நிறுவனத்தின் (Aus AID) நிதி அனுசரணையுடன் சித்திரவதையற்ற சமுதாயமொன்றை உருவாக்கும் நோக்கோடு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்ட "சித்திரவதையை கண்காணித்தல் மற்றும் அறிவை விருத்தி செய்யும் செயற்திட்டத்தின்" மற்றுமொரு படியாக இந்நூல் வெளிக்கொணரப்படுகின்றது.

சித்திரவதை சம்பந்தமாக தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள், சர்வதேச பிரகடனம், சமவாயம் ஆகியவற்றோடு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் P.R. பிரியந்த பெரேரா அவர்களால் எழுதப்பட்ட நடைமுறையிலுள்ள சட்டங்களின் நிலை, நீதிமன்ற தீர்ப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றது.

சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கு எதிரான சமவாயம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவருவது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

சித்திரவதையை தடுப்பது சார்பாக நடைமுறையில் உள்ள சட்டங்கள் சர்வதேச சமவாயங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய ஆய்வு மாணவர்கள், சட்ட மாணவர்கள், சட்டத்தரணிகள், அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுஜன அமைப்புகள் ஆகியவற்றுக்கு உபயோகமாகும் என்பதில் ஐயமில்லை.

# உள்ளடக்கம்

## அத்தியாயம் 1


பக்கம்

01. சில குறிப்பிடத்தக்க உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளுடன் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 11 — 01
(P.R.P. பெரேரா – ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்)


## அத்தியாயம் 11


02. சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கு எதிரான சமவாயம். — 13

03. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அத்தியாயம் 111 — 48

04. இலங்கை 1994ம் ஆண்டின் 22ம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டம். — 63

# அத்தியாயம் 1

## சில குறிப்பிடத்தக்க உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளுடன் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 11

*ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் P.R.P. பெரேரா.*

### அறிமுகம்

அடிப்படை உரிமைகள், அரசியலமைப்பின் 15 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டத்தால் விதந்துரைக்கப்பட்டவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைவாக அரசியலமைப்பின் 10, 11, 12(1), 12(3) மற்றும் 13 ஆம் உறுப்புரைகளின் கீழ் ஆட்கள் ஒவ்வொருவருக்கும் உரித்துடையதாக்கப்பட்ட உரிமைகளும் சுதந்திரங்களுடன் அரசியலமைப்பின் 12(2) மற்றும் 14 ஆம் உறுப்புரைகளின் கீழ் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் உரித்துடையதாக்கப்பட்ட உரிமைகளும் சுதந்திரங்களும் ஆகும்.

அடிப்படை உரிமையொன்றின் மீறல் தொடர்பில் 126(2) ஆம் உறுப்புரையுடன் 17 ஆம் உறுப்புரையைச் சேர்த்து வாசிப்பதன் கீழ் உயர்நீதிமன்றத்துக்கான விண்ணப்பமொன்று, அத்தகைய மீறல் ஆட்சித்துறை அல்லது நிருவாகத்துறை நடவடிக்கையினால் செய்யப்பட்டிருக்குமிடத்து மட்டுமே நிவாரணம் பெறக்கூடியதாகும்.

சனாதிபதி, அமைச்சர், பகிரங்க அலுவலர் அல்லது அரசமுகவர் அல்லது அதிகாரி என்போரினால் செய்யப்படும் செயல்கள் ஆட்சித்துறை அல்லது நிருவாகத் துறை நடவடிக்கை என்பதனுள்

சாதாரணமாக வரக்கூடும். நீதிமுறைச் செயல் மற்றும் பகிரங்க அலுவலர்களின் முற்றிலும் தனிப்பட்ட செயல்கள் ஆட்சித்துறை அல்லது நிருவாகத்துறை நடவடிக்கை என்ற விடயத்தினுள் வரமாட்டாது என்பது குறிப்பிடப்படுதல் வேண்டும். இருப்பினும் தனிப்பட்டவர்களின் முற்றிலும் தனிப்பட்ட செயல்கள், பகிரங்க அலுவலரின் தூண்டுதலில் அல்லது உடன்பாட்டுடன் செய்யப்பட்டிருந்தால் அத்தகைய செயல்கள் ஆட்சித்துறை அல்லது நிருவாகத்துறை நடவடிக்கையுள் கொண்டுவரப்படமுடியும்.

உறுப்புரை 126(2) இன்படி, இதன்கீழான விண்ணப்பமொன்று மனுதாரரின் அடிப்படை உரிமையின் மீறுகை அல்லது உடனடி மீறுகை தொடர்பில், நிவாரணம் அல்லது பரிகாரம் கோரி உயர்நீதிமன்ற விதிகளுக்கிணங்க, உயர் நீதிமன்றத்திற்கு முகவரியிட்டனுப்பிய எழுத்திலான மனுவொன்றின் மூலம் மனுதாரரினால் தாமாக அல்லது அவர் சார்பில் சட்டத்தரணி ஒருவரால் உயர்நீதிமன்ற பதிவகத்தில் கோப்பிடப்படலாம்.

அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரை, அரசியலமைப்பினால் அடிப்படையானவை என அங்கீகரிக்கப்பட்டும் பிரகடனப்படுத்தப்பட்டும் உள்ள சில உரிமைகளுடன் சம்பந்தப்படுகின்றது, அவை 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 111 ஆம் அத்தியாயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வேறு உரிமைகளைப் போல மிக விசேட தன்மையுடைய உரிமைகள் ஆகும். ஆள் எவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது என இவ்வுறுப்புரை ஏற்பாடு செய்கிறது.

அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரை தொடர்பில் வேல்முருகு எதிர் சட்டத்துறைத் தலைமையதிபதி மற்றும் ஏனையோர் வழக்கில் வனகுந்தர நீதியரசர் பின்வரும் கருத்துரைகளைச் செய்துள்ளார்.

சித்திரவதை மற்றும் தவறாக நடத்தல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பைத் தருகின்ற 11 ஆம் உறுப்புரை ஏனைய அடிப்படை உரிமைகளிலிருந்து பல்வேறுபட்ட அம்சங்களில் வேறுபட்டிருக் கின்றது. அரசியலமைப்பில் உத்தரவாதமளிக் கப்பட்ட அடிப்படை உரிமைகளில் இது மட்டும்தான் திருத்தம் செய்யப்பட 2/3 பெரும்பான்மை மட்டுமல்ல மக்கள் தீர்ப்பையும் தேவைப் படுத்துகின்றது என்பது உண்மையில் அதன் தனித்துவத்தை வெளிக்காட்டுகின்றது. இவ்வுரிமை மட்டுமே 111 ஆம் அத்தியாயத்தில் வெளிப்படுத்தப்பட்ட பல உரிமைகளில் எல்லோருக்கும் சமமான ஏற்புடைமையையும் அத்துடன் எந்த வழியிலும் மட்டுப்படுத்தப் படாததும் அல்லது குறைத்து மதிக்கப்படாதும் உள்ள உரிமை ஆகும். எவ்வாறாயினும் ஒருவர், ஐயமின்றி ஏனைய உரிமைகளில் இவ்வுரிமை முன்னனிலை யொன்றைக் கொண்டிருக்கிறது எனக் கூறலாம். இதனது முக்கியத்துவம், சமூகத்தில் இதனது விளைவுகள் பயன்களை மனதிற் கொண்டு, இது விசேட பரிகரிப்புக்காக வேறானதாக் கப்படுதல் வேண்டும். எனவே இவ்வுரிமைக்கான முழுப்பிரயோ கத்திற்கு இடம்தருவதும் இவ்வேற்பாடுகள் ஆகக்கூடிய ஏற்புடைமைகளை அனுபவிப்பதை உறுதிப்படுத்தலும் நீதிமன்றின் கடமையாகும்.

<u>அமல் சுதத் சில்வா</u> எதிர் <u>கொடித்துவக்கு</u> 1987(2) இ.ச.அ. 199 வழக்கில் 126 மற்றும் 127 ஆம் பக்கங்களில் இவ்வுறுப்புரிமையை அத்துக்கொறள நீதியரசர் ஆராய்கின்றார்.

அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரை ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான அல்லது மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு உட்படுத்துவதிலிருந்து தடுக்கிறது. இது எவ்விதமான கட்டுப்பாடுகள் அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமையாத பூரணமான அடிப்படை உரிமை ஒன்றாகும். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆளும் அவர் குற்றவாளியோ இல்லையோ இவ்வுரிமையினுடைய முழு அளவிலான உத்தரவாதத்திற்கு உரித்துடையவர். அரசின் உறுப்பொன்றாகவுள்ள பொலிஸ்படை இவ்வுரிமையை பாதுகாப்பதிற்கும் முன்னேற்றுவதற்கும் அரசியலமைப்பினால் அதிகாரபூர்வமாக உத்தரவிடப்படுகின்றதுடன் அதனை எச் சூழ்நிலையிலும் எம்முறையிலும் மறுக்கவோ, தடுக்கவோ அல்லது மட்டுப்படுத்தவோ அல்ல.

மனுதாரர் எந்த அனுதாபத்திற்கும் அருகதையுடையவரல்லாத வகையைச் சேர்ந்த கொடூரமான குற்றம் புரிவராக இருக்கலாம். ஆனால் அரசியலமைப்பு உத்தரவாதங்கள் எமது சனநாயக அமைப்பில் ஏதேனும் கருத்தை அல்லது மதிப்பைக் கொண்டிருந்தால் அவருக்கு எமது அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பாதுகாப்பு மறுக்கப்படலாகாது என்பது அத்தியாவசியமானது. பெனாண்டோ எதிர் சில்வா மற்றும் ஏனையோர் வழக்கில் (உ.நீ. விண். 7/89, உ.நீ.கு. 3/5/1991)

உயர்நீதிமன்றம், ஆள் ஒருவர் தொடர்புகொள்ளும் உரிமை பறிக்கப்பட்டு, தேவைப்படும் மருத்துவமின்றி, போதுமான உணவும் சாதாரண உடல் இயக்கங்களின் செயற்பாடுக்கான அடிப்படையான வசதிகள் மற்றும் நித்திரை உட்பட தேவைப்பாடுகள் இன்றியும் வைத்திருக்கப்படுதல் 11 ஆம் உறுப்புரை மீறலை உருவாக்குவதாக தீர்த்தது.

ஆயினும் <u>சில்வா எதிர் தலைவர், பெற்றோலிய கூட்டுத்தாபனம்</u> (1989(2) இ.ச.அ. 393) வழக்கில்

உயர்நீதிமன்றம். அந்நடத்தையானது 11 ஆம் உறுப்புரையை மீறுவதாக அமையுமாயின் அச் செயல் நீதிமன்றத்தினால் நீதிநெறிக் கவனத்திற்குட்படுத்தப்படக்கூடிய ஒரு வகையான செயலாக இருத்தல் வேண்டும். அதை நீதிமன்றம் கவனமாக எடுக்கலாம் என்ற நோக்கை வெளியிட்டது. இவ்வழக்கில் தொழில்தருநருடைய அளவுகடந்த இரக்கமற்ற தன்மை மற்றும் கடும்போக்கினால் தொழிலாளிக்கு ஏற்படுத்தப்பட்ட இடுக்கண் 11 ஆம் உறுப்புரையை மீறுவதாக இல்லை எனத் தீர்க்கப்பட்டது.

சித்திரவதை, கொடூரம் மற்றும் மனிதாபிமானமற்றதும் இழிவானதுமான நடாத்துகை அல்லது தண்டனை, உடல்சார் மற்றும் உளம்சார் எனப் பல வடிவங்களை எடுக்கலாம். ஆனால் பொருத்தமான உரைகற்களை திருப்தி செய்துள்ளதா என்பது ஒவ்வொரு வழக்கிலும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளில் தங்கியிருத்தல் வேண்டும். (உ.நீ.விண். 7/89, உ.நீ.கு. 3/5/1991) 1989(2) இ.ச.அ. 393.

இது தொடர்பில் 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க. சித்தரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நடாத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற் கெதிரான சாசனச் சட்டத்தில் சித்திரவதை என்ற பதத்தில் வரைவிலக்கணத்தை கருத்திற்கெடுத்தல் உதவியானதாகும்.

இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவு சித்திரவதை எனும் பதத்தை பின்வருமாறு வரையறை செய்கின்றது.

சித்திரவதை என்பது அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஓரினச் சொற்றொடர்களுடனும் வேறு எவரேனும் ஆளுக்கு உடற்சார்பிலாயினுஞ்சரி, உளச்சார்பிலாயினுஞ்சரி, கடும் நோவை ஏற்படுத்தும் ஏதேனும் செயல் என்று பொருள்படும். இச்செயல் –

(அ) பின்வரும் எவையேனும் நோக்கங்களுக்காக செய்யப்பட்டதும் அதாவது–

(1) அத்தகைய வேறு ஆளிடமிருந்து அல்லது ஒரு மூன்றாம் ஆளிடமிருந்து ஏதேனும் தகவலை அல்லது குற்ற ஒப்புதலைப் பெறுதல்;

(11) அத்தகைய வேறு ஆள் அல்லது ஒரு மூன்றாம் ஆள் புரிந்துள்ள ஏதேனும் செயலுக்கு அவரைத் தண்டித்தல்; அல்லது

(111) அத்தகைய வேறு ஆளை அல்லது ஒரு மூன்றாம் ஆளை அச்சுறுத்தல் அல்லது வற்புறுத்தல்;

(ஆ) பாரபட்சத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் காரணத்திற்காக செய்யப்பட்டதும்.

அத்துடன் ஒவ்வோர் விடயத்திலும் பகிரங்க அலுவலர் ஒருவரின் அல்லது அலுவலக முறையிலான தன்மையால் செயலாற்றும்

வேறு ஆளின் தூண்டுதலின் பேரில் அல்லது சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் செய்யப்பட்ட ஒரு சொல் ஆகும்.

### எண்பிக்கும் பொறுப்பு

சமன் எதிர் லீலாதாச (1989(1) இ.ச.அ. 1) வழக்கின் 12 ஆம் பக்கத்தில், 11 ஆம் உறுப்புரை மீறல் தொடர்பான முறைப்பாடுகளில் எண்பிக்கும் தராதரம் நிகழ்தகவு செல்வாக்கிலான எண்பிப்பு அத்துடன் தூண்டுதலான குடியியல் தராதரம் ஏற்புடையதாகிறது எனத் தீர்க்கப்பட்டது.

வேல்முருகு எதிர் சட்டத்துறை தலைமையதிபதி (1989(1) FRD 180 பக்கம் 197 மற்றும் 1998 இல் வணசுந்தர நீதியரசர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்.

சொல்லப்பட்ட நிகழ்வுகள் எண்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை தீர்மானிப்பதில், முறைப்பாடு செய்யப்பட்ட செயல் அல்லது நடத்தை இடம்பெற்றிருக்கிறது என்ற முடிவுக்கு நியாயமானதும் நீதியானதுமான மனிதன் வருகின்றானா என நீதிமன்றம் தன்னைத்தான் கேட்கலாம். நீதிமன்றம் உண்மையான அல்லது உள்ளார்ந்த சந்தேகத்தில் இருந்தால், அதாவது அத்தகைய முடிவுக்கு செல்வதிலிருந்து நியாயமானதும் நீதியானதுமான மனிதன் தடுக்கப்படுவார் என சந்தேகம் இருந்தால் நீதிமன்றம் குற்றச்சார்த்துதல் தாபிக்கப்பட்டிருக்கவில்லை என தீர்க்கும்.

வேல்முருகு வழக்கில் முன்வைக்கப்பட்ட இந்த பரீட்சிப்பு சுப்பிரக்கியன எதிர் கெட்டியாராச்சி வழக்கில் விமலரட்னா நீதியரசர்

ஏற்புடையதாக்கினார் இது தொடர்பில் பின்வரும் வழக்குகளையும் பார்க்கலாம்.

1. சானக பீரிஸ் மற்றும் ஏனையோர் (1994(1) இ. ச.அ. 01)
2. குமீட் எதிர் ரணசிங்க மற்றும் ஏனையோர் 1990(1) இ.ச.அ. 104)
3. சமன்திலக்க எதிர் எனஸ்ற் பெரேரா (1990(1) இ.ச.அ. 318)

## உறுதிப்படுத்தலுக்கான அவசியம்

உயர்நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்புகளின்படி மனுதாரரின் சித்தரவதை தொடர்பான முறைப்பாடு, மருத்துவ சான்றினால் உறுதிப்படுத்தப்பட்டாலொழிய நீதிமன்றத்தினால் ஏற்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாக இல்லை. பார்க்க

1. நமசிவாயம் எதிர் குணவர்த்தன (1989(1) இ.ச.அ. 394
2. கூடத் சில்வா எதிர் கொடித்துவக்கு 1987(2) இ.ச.அ.129

இவ்வழக்கில் மருத்துவ சான்றானது, 11 ஆம் உறுப்புரையை மீறுவதான அளவினதான தன்மையில் காயங்கள் இருந்தனவா என்பதை தீர்மானிப்பதிலும், நிகழ்வு தொடர்பில் மனுதாரராக அல்லது எதிர்மனுதாரரது சமர்ப்பணம் உண்மையானது என்பதை இவ் வழக்கு சூழ்நிலைகளில் தீர்மானிப்பதிலும் மிக முக்கியமானதாக இருப்பதாக கருதப்பட்டது. உடல் ரீதியான தாக்குதல் குற்றச் சார்த்துதல்களை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவ சான்று இல்லாமையால் உயர்நீதிமன்றம் 11 ஆம் உறுப்புரை மீறல் தாபிக்கப்பட்டிருக்கவில்லை எனத் தீர்த்திருக்கின்றது. பார்க்க.

(1) <u>கப்பு கீகியன</u> எதிர் <u>ஹெட்டியாராச்சி</u>

(2) <u>நமசிவாயம்</u> எதிர் <u>குணவர்த்தன</u>

பின்னைய வழக்கில், உயர்நீதிமன்றம் இந்த நோக்கிலிருந்து விலகியதுடன், வேறு சான்றுகள் காணப்படுமானால் மருத்துவ சான்று இல்லாமை ஒரு விடயமாக கொள்ளமுடியாது எனத் தீர்த்தது. இதனால் அனாசிலன் பெனாண்டோ எ. சரத் பெரேரா மற்றும் ஏனையோர் வழக்கில் 1992(1) இ.ச.அ. 111 பக்கம் 419–420 இல் குலதுங்க நீதியரசர் பின்வருமாறு கருதினார்.

நான் பொலிசுக்கு எதிரான தாக்குதல் / தவறான நடாத்துகை தொடர்பான குற்றச்சார்த்துதல் வலுப்படுத்துகின்ற சான்றினால் ஆதாரமளிக்கப்பட்டாலொழிய, அவற்றை ஏற்கமாட்டேன். பொலிசு அதனை மறுக்கிறது அல்லது பாதிக்கப்பட்ட திறந்தவர் காயங்கள் தொடர்பான மருத்துவ சான்றை முன்வைக்க முடியவில்லை என்ற காரணத்தினால் மட்டும் அத்தகைய குற்றச்சார்த்துதல்களை மறுப்பது முறையானதாக நான் கருதவில்லை. ஏதாவது குறிப்பான நடாத்துகை அரசியலமைப்பில் 11 ஆம் உறுப்புரையை மீறுவதானதா என்பது ஒவ்வொரு வழக்கினதும் நிகழ்வுகளில் தங்கியுள்ளது. காயங்கள் மருத்துவ ரீதியாக ஆதாரப்படுத்தல் இல்லாத போதும்கூட குற்றச்சார்த்தல் தாபிக்கப்படலாம்.

ஆகவே தற்போது, உயர் தரத்திலான நிச்சயத்தன்மை 11 ஆம் உறுப்புரையினுடைய மீறுகைக் குற்றச்சார்த்துதல் தொடர்பில் தேவைப்படுத்தப்படுகின்றபோது நீதிமன்றம் நீதியை அணுகுவதைத் தடைசெய்யக்கூடிய மனுதாரர் மீதான முறையற்ற சுமையைச் சுமத்தமாட்டாது என உணர்வது பாதுகாப்பானதாகும். பார்க்க,

1. சுமன்திலக எதிர் எனொஸ்ட் பெரேரா 1990(1) இ.ச.அ. 318
2. மலின்ட் சன்ன பீரிஸ் மற்றும் ஏனையோர் எதிர் சட்டத்துறை தலைமையதிபதி 1994(1) இ.ச.அ. 1

## பாதிக்கப்பட்டவருக்கான நட்டஈடு

பதினொராம் உறுப்புரையால் பாதுகாக்கப்பட்ட தமது உரிமைகள் மீறுகைக்காக மனுதாரரால் கோப்பிடப்பட்ட பல வழக்குகளில் உயர்நீதிமன்றம் அந்நாள்வரை பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈட்டை தனிப்பட்ட ரீதியில் செலுத்தும்படி கட்டளையிடுவதன் மூலம் தண்டனை விதித்து வந்தது. இது எதிர்கால தவறாளர்களுக்கான எச்சரிக்கையொன்றாக செயற்படும் என்ற நம்பிக்கையில் செயற்பட்டது. ஆனால் இது இப்பிரச்சினையில் கடுமையான தாக்கத்தைக் கொண்டிருப்பதாக தோன்றவில்லை.

இது தொடர்பில் நீதிமன்றத்தின் அதிருப்தி ரண்டபால எதிர் தர்மசிறி 1993(1) இ.ச.அ. 224 வழக்கில் வெளிப்படுத்தப்பட்டது. இவ்வழக்கில் குலத்துங்க நீதியரசர் பின்வருமாறு கருதினார்:–

ஆகவே பல தீர்ப்புக்கள் இருந்தும்கூட, பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் பூரணமான அவமதிப்பு தவிர்க்க முடியாததாக தொடர்கிறது என எனக்கு அது தோன்றுகிறது. நிவாரணம் வழங்குவதில் இந்த நீதிமன்றம் இத்தகைய அபிவிருத்தியை அவசியமாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

ஜெயசென எதிர் ராமனாயக்கா மற்றும் ஏனையோர் (உ.நீ.ம 17/94) வழக்கில் தீரரட்னா நீதியரசர் பின்வருமாறு கூறினார்.

அத்தகைய அதிகாரத்தை எதிர்க்கும் சட்டத்தின் பாதுகாவலர்கள் மீது இந் நீதிமன்றத்தால் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டது எது எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பின் பின் கீழ் மிகவும் பயபக்தியுடன் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீது மீண்டும் மீண்டும் சில பொலிஸ் அலுவலரால் கண்மூடித்தனமான புறக்கணிப்பு காட்டப்படுவதை இவ்வழக்கின் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இறுதியாக, அபசில் பெனாண்டோ எதிர் குணரட்ன மற்றும் ஏனையோர் (உ.நீ. 100/95 உ.நீ.கு 3/11/1995) வழக்கில் குலத்துங்கா நீதியரசின் கருத்துக்களை குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

நட்டஈடு செலுத்துகை நடத்தையின் வெறுப்பை குறிப்பதற்கு தோதானதாக இருந்தது. அத்துடன் நீதிமன்றம் நீதியும் ஒப்புரவுமானதென கருதப்பட்ட நட்டஈட்டில் பகுதியை கடமை தவறிய பிரதிவாதி தனிப்பட்ட முறையில் செலுத்த கட்டளை இடுகின்றமையும் மனுதாரர்களின் காயமடைந்த உணர்வுகளை திணிப்பதற்கு உதவக்கூடும். இருந்தபோதிலும் அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரையின் உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளின் மீறுகைகளை குறைப்பதில் மேலும் வெற்றிகரமான விளைவுகளை பெறவேண்டுமானால் ஒருவர் தண்டிக்கும் நடவடிக்கைகளுக்கு அப்பால் பார்க்கவேண்டியிருக்கும்.

11 ஆம் உறுப்புரையின் மீறுகையில் செயற்படுகின்ற ஆள் ஒருவர்மீண்டும் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கில் அரசுக்கு எதிராக தீர்க்கப்பட்ட நட்டஈட்டில் பகுதி ஒன்றை தனிப்பட்ட ரீதியில் செலுத்தவேண்டும் என்ற தேவைப்பாடொன்றை உள்ளடக்குவதாக உயர்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனைகள் இருந்தும் மீறுகைகள் தொடருகின்றன என்பது கவலையானது ஆனால் உண்மையானது பிரதிவாதியால் செலுத்தப்படவேண்டிய தொகையை தீர்மானிப்பதில் நீதிமன்றம் அவரது வழிவகைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும். பிரதிவாதியால் செலுத்தவேண்டுமென கட்டளையிடப்பட்ட தொகை எதிர்காலத்தில் மீறுபவர்களுக்கு எச்சரிக்கையாக செயற்பட போதுமானதாக இருக்கமாட்டாது.

# அத்தியாயம் 2

## சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றுக்கு எதிரான சமவாயம்

(1984 டிசம்பர் 10 ஆம் திகதிய 39,46 பொதுச்சபைத் தீர்மானத்தின் மூலம் ஏற்று அங்கீகரிக்கப்பட்டதுடன் கையெழுத்திடுதல், பின்னுறுதிப்படுத்தல் மற்றும் ஏற்புக்காக வைக்கப்படுகிறது.)

வலுவுக்கு வருதல்: யூன் 26, 1987, உறுப்புரை 27(1) உடன் இசைவாக

இச்சமவாயத்திற்கான அரச தரப்பினர்கள்,

ஐக்கிய நாடுகள் பட்டயத்தில் பிரகடனம் செய்யப்பட்ட கோட்பாடுகளுடன் இசைவாக, மனித குடும்பத்தின் சகல உறுப்பினர்களினதும் சமமானதும் பராதீனப்படுத்தப்பட முடியாத உரிமைகளை அங்கீகரித்தலானது சுதந்திரம், நீதி மற்றும் உலக சமாதானம் என்பவற்றின் அத்திவாரமாக உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, அத்தகைய உரிமைகள் மனித ஆட்களின் உள்ளார்ந்த கௌரவத்திலிருந்து வழிவருகின்றன என்பதை அங்கீகரித்து,

மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களுக்கான அனைத்துலக மதிப்பையும் அவற்றின் அவதானிப்புகளையும் மேம்படுத்துவதற்காக, குறிப்பாக உறுப்புரை 55 இல், பட்டயத்தின் கீழான அரசுகளின் கடப்பாடுகளைக் கருத்திற் கொண்டு,

ஆளெவரும் சித்திரவதைக்கு, அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டனைக்கு உட்படுத்தலாகாது என ஏற்பாடு செய்கின்ற மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தின் உறுப்புரை 5 மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனையின் உறுப்புரை 7 இரண்டையும் மனதிற்கொண்டும்,

1975 டிசம்பர் 9 ஆம் திகதியில் பொதுச்சபையினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டனைக்கு உள்ளாவதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் மீதான பிரகடனத்தினையும் மனதிற் கொண்டு,

உலகம் முழுவதும் சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான மேலும் வினைத்திறனான போராட்டத்தை செய்தற்கு விரும்பி, பின்வருமாறு உடன்படுகின்றனர்.

## பாகம் 1
## உறுப்புரை 1

1. இச்சமவாயத்தின் நோக்கத்திற்காக, " சித்திரவதை" என்பது அவரிடமிருந்து அல்லது ஒரு மூன்றாம் ஆளிடமிருந்து தகவலை அல்லது ஒரு குற்ற ஒப்புதலைப் பெறுகின்றதான, அவரினால் அல்லது ஒரு மூன்றாம் ஆளினால் புரியப்பட்டிருக்கின்ற அல்லது புரியப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்ற செயலொன்றுக்காக அவரைத்

தண்டிக்கின்றதான, அல்லது அவரை அல்லது மூன்றாம் ஆளை அச்சுறுத்துகின்றதான அல்லது வற்புறுத்துகின்றதான. பாரபட்சத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் காரணத்திற்காக அத்தகைய நோக்கங்களுக்காக ஒரு ஆள் மீது உளக்கருத்துடன் உடல் சார்பிலான அல்லது உள சார்பிலான கடுமையான நோவை அல்லது துன்பத்தை ஏற்படுத்தும் ஏதேனும் செயல் எனப் பொருள்படும். அத்தகைய நோ அல்லது துன்பம் பகிரங்க அலுவலரின் அல்லது அலுவலக முறையிலான தன்மையில் செயலாற்றும் வேறு ஆளின் சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் புலன் விசாரணையில் இழைக்கப்படுகின்றபோது அது சட்டபூர்வமாக தண்டனைகளுக்கு உள்ளார்ந்ததாக அல்லது இடைநேர் விளைவானதாக எழுகின்ற நோ அல்லது துன்பத்தை உள்ளடக்காது,

2. இவ்வுறுப்புரை, பரந்த ஏற்புடைமையின் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் சர்வதேச ஆவணம் அல்லது தேசிய சட்டவாக்கத்திற்கு பங்கமின்றி உள்ளது.

## உறுப்புரை 2

1. ஒவ்வொரு அரச தரப்பும்/அதனது அதிகாரப் பரப்பினுள் ஏதேனும் ஆள் புலத்தில் சித்திரவதை செயல்களைத் தடுப்பதற்கு வினைத்திறனான சட்டவாக்க, நிருவாக. நீதி அல்லது வேறு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

2. போர் நிலைமை, போரின் அச்சுறுத்தல், உள்நாட்டு அரசியல் உறுதி நிலையற்ற தன்மை, அல்லது வேறு ஏதேனும் பொதுமக்கள் அவசரகால நிலைமை போன்ற எந்த விதிவிலக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் எதுவாயினும் சரி சித்திரவதையை நீதியானதொன்றாக வேண்டிநிற்றலாகாது.

3. உயர் அலுவலர் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரிடமிருந்தான கட்டளை ஒன்று சித்திரவதையை நீதியானதொன்றாக வேண்டி நிற்கப்படலாகாது.

## உறுப்புரை 3

1. எந்த அரச தரப்பும் ஆள் ஒருவர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்ற ஆபத்தில் இருப்பார் என நம்புவதற்கு கணிசமானளவு ஏதுக்கள் உள்ளவிடத்து, அவரை வேறொரு நாட்டிற்கு வெளியேற்றுதல், திருப்புதல் அல்லது மீள ஒப்படைத்தல் ஆகாது.

2. அத்தகைய அடிப்படைகள் உள்ளனவா என்பதைத் தீர்மானிக்கின்ற நோக்கத்திற்காக, ஏற்புடையதானவிடத்து தகுதிவாய்ந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அரச மாறிலியான தன்மைத்தான பாரிய வெளிப்படையாக மற்றும் பெருமளவிலான மனித உரிமைகளின் மீறல்கள் உள்ளவிடத்து உள்ளமை உட்பட எல்லா பொருத்தமான விடயங்களையும் கருத்திற்கெடுத்தல் வேண்டும்.

## உறுப்புரை 4

1. ஒவ்வொரு அரச தரப்பும் எல்லா சித்திரவதைச் செயல்களும் அதனது குற்றவியல் சட்டத்தின் கீழ் தவறாகும் என உறுதிப்படுத்துதல் வேண்டும். இதுவே, சித்திரவதை புரிவதற்கான எத்தனம் ஒன்றுக்கும், எவரேனும் ஆளினால் சித்திரவதையில் ஒத்தாசை அல்லது பங்கெடுத்தலை உருவாக்குகின்ற செயல் ஒன்றுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்,

2. ஒவ்வொரு அரச தரப்பும் தவறின் பாரதூரமான தன்மையைக் கருத்திற்கெடுத்து தோதான தண்டனையால் தண்டிக்கப்படற்பாலதான தவறுகளாக அவற்றை ஆக்குதல் வேண்டும்.

## உறுப்புரை 5

1. ஒவ்வொரு அரச தரப்பினரும் பின்வரும் விடயங்களில் 4 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் மீதான அதனது நியாயாதிக்கத்தைத் தாபிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

   (அ) தவறுகள் ஏதேனும் ஆள்புலத்தில் அதனது நியாயாதிக்க பரப்பின் கீழ் அல்லது அவ் அரசில் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்றில் அல்லது வானூர்தியில் புரியப்படுகின்ற போது;

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்ட தவறாளர் அவ்வரசின் நாட்டினத்தவராக உள்ளபோது;

(இ) அது தோதானதென அவ் அரசு கருதுமானால், பாதிக்கப்பட்டவர் அவ்வரசின் நாட்டினத்தவராக உள்ளபோது.

2. ஒவ்வொரு அரச தரப்பினரும் குற்றஞ்சாட்டப்பட்ட தவறாளர் அதனது நியாயாதிக்கத்தின் கீழான ஏதேனும் ஆள்புலத்தில் சமூகமாக உள்ளார், அத்துடன் இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எவையேனும் அரசுகளுக்கு 8 ஆம் உறுப்புரையைப் பின்பற்றி குற்றஞ்சாட்டப்பட்ட தவறாளரை மீள ஒப்படைக்க முடியாதவிடத்தும் அத்தகைய தவறுகள் மீதான அதனது நியாயாதிக்கத்தைத் தாபிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை அதேபோன்று எடுத்தல் வேண்டும்,

3. இச்சமவாயம் உள்நாட்டு சட்டங்களுக்கு இசைவான ஏதேனும் குற்றவியல் நியாயாதிக்கத்தை விலக்குவதாகாது.

## உறுப்புரை 6

1. அதற்கு கிடைக்கக்கூடியதான தகவலைப் பரீட்சித்தபின்னர், சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவ்வாறு அவசியமானதென திருப்திப்பட்டதன் மேல், எதனுடைய ஆள்புலத்தில் 4 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறைப் புரிந்திருக்கிறார் என சொல்லப்பட்ட ஆள் சமூகமாக இருக்கிறாரோ அந்த ஏதேனும் அரச தரப்பினர் அவரை கட்டுக்காவலுக்கு எடுத்தல் வேண்டும் அல்லது அவரது

பிரசன்னத்தை உறுதிப்படுத்த வேறு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். கட்டுக்காவல் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகள் அவ்வரசின் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறானதாக இருத்தல் வேண்டும். ஆனால் ஏதேனும் குற்றவியல் அல்லது மீள ஒப்படைப்பு வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்படுவதற்கு இயலச்செய்ய அவசியமானவாறான அத்தகைய காலத்திற்கு மட்டும் நீடிக்கப்படலாம்.

2. அத்தகைய அரசு, நிகழ்வுகளில் பூர்வாங்க விசாரணை ஒன்றை உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

3. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியைப் பின்பற்றி கட்டுக்காவலிலுள்ள எவரேனும் ஆள் எந்த அரசின் நாட்டினத்தவராக இருக்கிறாரோ அந்த அரசின் அண்மைய தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்றவரானால், அவர் எந்த அரசில் வழமையாக வதிக்கின்றாரோ அந்த அரசின் பிரதிநிதிக்கு உடனடியாக தொடர்புகொள்வதில் உதவியளிக்கப்படல் வேண்டும்.

4. இவ்வுறுப்புரையைப் பின்பற்றி அரசொன்று ஆள் ஒருவரை கட்டுக்காவலுக்கு எடுத்திருக்கின்றபோது அது அத்தகைய ஆள் கட்டுக்காவலில் உள்ளதையும் எச் சூழ்நிலைகள் அவரது தடுத்துவைப்பை அவசியமானதாக்கியதோ அச்சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பற்றிய நிகழ்வை 5 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அரசுகளுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். எந்த அரசு இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்தியில் இடப்பட்ட பூர்வாங்க

விசாரணையை மேற்கொள்கிறதோ அந்த அரசு சொல்லப்பட்ட அரசுக்கு அதனது முடிவுகளை முறையாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்க எண்ணுகின்றதா எனவும் குறிப்பிடுதலும் வேண்டும்.

## உறுப்புரை 7

1. எதனது நியாயாதிக்கத்தின் கீழான ஆள்புலத்தில் 4 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறைப் புரிந்திருக்கிறார் எனச் சொல்லப்பட்ட ஆள் ஒருவர் கண்டுபிடிக்கப்படுகிறாரோ அந்த அரச தரப்பு 5 ஆம் உறுப்புரையில் இடப்பட்ட விடயங்களில் அது அவரை மீள ஒப்படைப்பதில்லையானால், வழக்கு தொடரும் நோக்கத்திற்காக அதனது தகுதிவாய்ந்த அதிகாரிக்கு வழக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. அத்தகைய அதிகாரிகள் அவ்வரசின் சட்டத்தின் கீழ் கடுமையான தன்மையிலான ஏதேனும் சாதாரண தவறிற்கான வழக்குப்போல அதே முறையில் அவர்களது தீர்மானங்களை எடுத்தல் வேண்டும். 5 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்குகளில் வழக்குத்தொடர்தல் மற்றும் குற்றத் தீர்ப்பளித்தலுக்காக தேவைப்படுத்தப்பட்ட சான்றுகளின் தராதரங்கள் 5 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்குகளில் ஏற்புடையதாவதைவிட எந்த வகையிலும் கண்டிப்புக் குறைந்ததாக இருத்தலாகாது.

3. எந்த ஆள் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் 4 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் தவறுகள் தொடர்பில் கொண்டுவரப்படுகின்றதோ அந்த ஆளுக்கு வழக்கு நடவடிக்கைகளின் எல்லாக் கட்டங்களிலும் நியாயமான நடாத்துகை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை 8

1. நாலாம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் அரச தரப்பினர்களிடையே இருந்துவருகின்ற ஏதேனும் மீள ஒப்படைப்பு உடன்பாட்டில் மீள ஒப்படைக்கத்தகு தவறுகளாக உள்ளடக்கப்படுவதாக கருதப்படல் வேண்டும். அரச தரப்பினர்கள் தம்மிடையே முடிவாக்கப்பட்டிருக்கின்ற மீள ஒப்படைப்பு உடன்பாடு ஒவ்வொன்றிலும் அத்தகைய தவறுகள் மீள ஒப்படைக்கத்தகு குற்றங்களாக உள்ளடக்குவதற்கு பொறுப்பேற்கின்றனர்.

2. உடன்படிக்கை ஒன்றின் உள்ளமை மீது நிபந்தனையுடனான மீள ஒப்படைப்பை மேற்கொள்கின்ற அரச தரப்பு ஒன்று வேறொன்றிடமிருந்து மீள ஒப்படைப்புக்கான வேண்டுகோள் ஒன்றை பெற்றால், அது எந்த அரச தரப்புடன் மீள ஒப்படைப்பு உடன்பாட்டைக் கொண்டிருக்கவில்லையோ அந்த அரச தரப்பு அத்தகைய தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைப்பதற்கான சட்ட அடிப்படையாக இந்தச் சமவாயத்தை கருத்திற்கொள்ளலாம். மீள ஒப்படைப்பு வேண்டுகோள் விடுத்த அரசின் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வேறு நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

3 எந்த அரச தரப்பு உடன்பாடு ஒன்றின் உள்ளமை மீது நிபந்தனையுடனான மீள ஒப்படைப்பை மேற்கொள்வதில்லையோ அந்த அரச தரப்பு வேண்டுகோள் விடுத்த அரசின் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக அவர்களிடையே மீள ஒப்படைக்கத்தகு தவறுகளாக அத்தகை தவறுகளை அங்கிகரித்தல் வேண்டும்.

4. அத்தகைய தவறுகள், அரச தரப்பினர்களிடையே மீள ஒப்படைப்பு செய்யும் நோக்கத்தற்காக,அவை எவ்விடத்தில் நிகழ்ந்ததோ அவ்விடத்தில் மட்டுமல்ல ஆனால் 5 ஆம் உறுப்புரை 1 ஆம் பந்திக்கு இணங்க, அவர்களது நியாயாதிக்கத்தைத் தாபிப்பதற்கு தேவைப்படும் அரசுகளின் ஆள்புலங்களிலும் புரியப்பட்டாற் போன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை 9

1. அரச தரப்பினர்கள், வழக்கு நடவடிக்கைகளுக்கு அவசியமான அவர்கள் வசமுள்ள எல்லா சான்றுகளையும் வழங்குதல் உட்பட 4 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் குற்றங்கள் தொடர்பில் கொண்டுவரப்பட்ட குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் தொடர்பில் மிக பாரிய உதவி நடவடிக்கையை ஒன்று இன்னொன்றுக்கு அளித்தல் வேண்டும்.

2. அரச தரப்பினர்கள் அவர்களிடையே இருக்கக்கூடிய இருவகையிலொத்த நீதி உதவி மீதான எவையேனும் உடன்பாட்டுக்கு இசைவாக இவ்வுறுப்புரையில் 1 ஆம் பந்தியின் கீழ் அவர்களது கடப்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

## உறுப்புரை 10

1. ஒவ்வொரு அரச தரப்பும், சித்திரவதைக்கு எதிரான தடுப்புத் தொடர்பில் கல்வி மற்றும் தகவல், சட்ட அமுலாக்கல் ஆளணியினர் பகிரங்க அல்லது இராணுவ, மருத்துவ ஆளணியினர், பகிரங்க அலுவலர் கைது, தடுத்துவைப்பு அல்லது மறியற்றண்டனை போன்ற எவையேனும் வகைக்கு உட்படுத்தப்படும் எவரேனும் தனிப்பட்டவரை கட்டுக்காவல், புலன்விசாரணை அல்லது நடாத்துதல் தொடர்பில் ஈடுபடும் வேறு அலுவலர்கள் போன்றோரின் பயிற்சியில் முழுமையாக உள்ளடக்கப்படுகின்றதென உறுதிப்படுத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு அரச தரப்பும், எவரேனும் அத்தகைய ஆளின் கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பில் வழங்கப்பட்ட விதிகள் அல்லது அறிவுறுத்தல்களில் இந்த தடுப்பை உள்ளடக்குதல் வேண்டும்.

## உறுப்புரை 11

ஒவ்வொரு அரச தரப்பும் எவையேனும் சித்திரவதை விடயங்களைத் தடுக்கும் நோக்குடன், புலனாய்வு விதிகள், அறிவுறுத்தல்கள், முறைகள் மற்றும் நடைமுறைகள் அத்துடன் அதன் நியாயாதிக்கத்தின் கீழ் ஏதேனும் ஆள்புலத்தில் கைது, தடுத்துவைப்பு அல்லது மறியற்தண்டனை போன்ற எவையேனும் விதத்திற்கு உட்படுத்தப்படும் ஆட்களை கட்டுக்காவல் மற்றும் நடாத்துதலுக்கான ஒழுங்குகளை ஒழுங்குமுறையான மீளாய்வின் கீழ் பேணுதல் வேண்டும்.

## உறுப்புரை 12

ஒவ்வொரு அரச தரப்பும் சித்திரவதைச் செயல் அதனது நியாயாதிக்கத்தின் கீழ் ஏதேனும் ஆள்புலத்தில் புரியப்பட்டிருக்கின்றதென நம்புவதற்கு நியாயமான ஏது இருக்குமிடத்து அதனது தகுதிவாய்ந்த அதிகாரிகள் உடனடியானதும் பக்கச் சார்பற்றதுமான புலன்விசாரணையை நடாத்துபவர் என உறுதிப்படுத்தல் வேண்டும்.

## உறுப்புரை 13

ஒவ்வொரு அரச தரப்பும், அதனது நியாயாதிக்கத்தின் கீழான ஏதேனும் ஆள்புலத்தில் தான் சித்திரவதைக்குட் படுத்தப்பட்டதாக கூறுகின்ற எந்த தனிப்பட்டவரும் அதனது தகுதிவாய்ந்த அதிகாரிக்கு முறைப்பாடு செய்வதற்கும், அவரால் தனது வழக்கை உடனடியாகவும் பக்கச்சார்பற்றும்

விசாரிக்கப்படுவதற்கு உரிமையைக் கொண்டிருக்கிறார் என உறுதிப்படுத்தல் வேண்டும், முறைப்பாட்டாளர் மற்றும் சாட்சிகள் தமது முறைப்பாட்டின் அல்லது தரப்பட்ட ஏதேனும் சான்றின் விளைவொன்றாக தவறாக நடாத்துதல் அல்லது அச்சுறுத்தல் என்பவற்றுக்கெதிராக பாதுகாக்கப் படுகிறார்கள் என உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை 14

1. ஒவ்வொரு அரச தரப்பும் அதனது சட்டமுறைமைகளில் சித்திரவதைச் செயலொன்றில் பாதிக்கப்பட்டவர் நிவாரணம் பெறுதல் மற்றும் சாத்தியமான முழு புனருத்தாரணமாக வழிவகைகள் உட்பட நியாயமானதும் போதுமானதுமான நட்டஈட்டுக்கான அமுலாக்கக்கூடிய உரிமை ஒன்றை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். சித்திரவதைச் செயலொன்றின் விளைவாக பாதிக்கப்பட்டவர் இறக்கும் பட்சத்தில் அவரைச் சார்ந்திருப்போர் நட்டஈடு பெறுவதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

2. இவ்வுறுப்புரையில் எதுவும் தேசிய சட்டவாக்கத்தின் கீழ் இருந்து வருகின்றதான பாதிக்கப்பட்டவர் அல்லது வேறு ஆட்களுக்கான நட்டஈட்டுக்கான ஏதேனும் உரிமையைப் பாதித்தலாகாது.

## உறுப்புரை 15

ஒவ்வொரு அரச தரப்பும், சித்திரவதையின் விளைவாக எந்த வாக்கு மூலம் செய்யப்பட்டிருக்கிறதென தாபிக்கப்படுகின்றதோ அத்தகைய வாக்குமூலம் செய்யப்பட்டது என்பதற்கு சான்றாக சித்திரவதைக்கு குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு எதிராக தவிர்ந்த, ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக வேண்டி நிற்றலாகாது.

## உறுப்புரை 16

1. ஒவ்வொரு அரச தரப்பும் அதனது நியாயாதிக்கத்தின் கீழான ஏதேனும் ஆள்புலத்தில் 1 ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாக சித்திரவதை அளவிற்கு அல்லாத வேறு கொடூரமான செயல்கள், மனிதாபிமானமற்ற அல்லது கீழ்தரமான முறையில் நடாத்தல் அல்லது தண்டித்தல் பகிரங்க அலுவலரால் அல்லது அலுவலக முறையிலான தன்மையில் செயலாற்றும் வேறு ஆட்களின் சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் அவர்களது விசாரணையில் அவர்களால் புரியப்படுகின்றபோது தடுப்பதற்கு பொறுப்பேற்றல் வேண்டும். குறிப்பாக 10, 11, 12 ஆம் மற்றும் 13 ஆம் உறுப்புரைகளில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் வேறு கொடூரமான முறை, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்தரமான முறையில் நடாத்தல் அல்லது தண்டிப்பு தொடர்பான குறிப்பீடுகள் சித்திரவதைக்கான குறிப்பீடுகளுக்காக பதிலீடு செய்யப்பட்டு ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்.

2. இச்சமவாயத்தின் ஏற்பாடுகள், கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடாத்தல் அல்லது தண்டித்தல் என்பனவற்றைத் தடை செய்கின்ற அல்லது மீள ஒப்படைப்பு அல்லது வெளியேற்றல் தொடர்பிலான வேறு ஏதேனும் சர்வதேச ஆவணங்கள் அல்லது தேசிய சட்டங்களின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி இருக்கிறது.

## பாகம் 2
## உறுப்புரை 17

1. இதனகத்துப் பின்னர் குழு எனக் குறிப்பீடு செய்யப்படும் சித்திரவதைக்கு எதிரான குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட பணிகளை கொண்டு நடாத்துதலும் வேண்டும். குழுவானது அவர்களது தனிப்பட்ட தன்மையில் உயரிய ஒழுக்க தராதரத்தையும் மனித உரிமைகள் விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையையும் கொண்ட பத்து நிபுணர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும், நிபுணர்கள், நியாயமான பூகோள பகிர்ந்தளிப்பு தரப்படுதலையும் சட்ட அனுபவம் கொண்டுள்ள சில ஆட்களின் பங்குபற்றுதலின் பயன்பாட்டை கருத்திற் கொண்டு, அரச தரப்பினரால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

2. குழு உறுப்பினர்கள், அரச தரப்பினரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களின் நிரலிலிருந்து இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு அரச தரப்பும் அதனது சொந்த

நாட்டினத்தவர்களிடையேயிருந்து ஒரு ஆளை பெயர் குறித்து நியமிக்கலாம். அரச தரப்பினர்கள் பெயர் குறித்து நியமிக்கின்ற ஆட்கள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனையின் கீழ் தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் குழுவின் உறுப்பினர்களாகவும் சித்திரவதைக்கு எதிரான குழுவில் பங்காற்ற விரும்புகின்றவர்களுமாக இருக்கின்ற ஆட்களின் பயன்பாட்டை மனதிற் கொள்ளுதல் வேண்டும்.

3. குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தால் கூட்டப்பட்ட அரச தரப்பினர்களின் இரண்டாண்டுக்கு ஒருமுறை கூடும் கூட்டத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் அரச தரப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் கூட்டநடப்பெண்ணை உருவாக்குவதாதல் வேண்டும். குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்படும் ஆட்கள், சமூகமளித்து வாக்களிக்கின்ற அரச தரப்பினர்களின் பிரதிநிதிகளின் வாக்குகளில் அதிகூடிய வாக்கு எண்ணிக்கையைப் பெறுவதுடன் முழுப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர்கள் எவர்களோ அவர்களாதல் வேண்டும்.

4. ஆரம்ப தேர்தல், இச்சமவாயம் அமுலுக்கு வந்த திகதியின் பின்னர் ஆறு மாதங்களுக்கு பிந்தாமல் நடாத்தப்படுதல் வேண்டும். ஒவ்வொரு தேர்தல் திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது நான்கு மாதங்களில், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் மூன்று மாதங்களுள் தமது பெயர்குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்கும்படி அவர்களை வரவழைக்கின்ற அரச தரப்பினர்களுக்கான கடிதமொன்றை

அனுப்புதல் வேண்டும். செயலாளர் நாயகம் அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எல்லா ஆட்களையும் அவர்களை எந்த அரச தரப்பு பெயர் குறித்து நியமித்திருக்கிறது என்பதை குறிப்பிடுகின்ற அரைவரிசையிலான நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அதை அரசு தரப்பினர்களுக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

5. குழு உறுப்பினர்கள் நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும், அவர்கள் மீள பெயர் குறித்து நியமிக்கப்பட்டால் மீள தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும். எவ்வாறாயினும் முதற் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஐவரின் காலம் இரண்டு வருட முடிவில் காலாவதியாதல் வேண்டும்; முதற் தேர்தலின் பின்னர் உடனடியாக அத்தகைய ஐந்து உறுப்பினர்களின் பெயர்களும் இவ்வுறுப்புரையின் 3 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூட்டத்தின் தலைவரால் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

6. குழு உறுப்பினர் ஒருவர் இறப்பு அல்லது பதவி விலகுதல் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் தனது குழுக் கடமைகளைப் புரிய இயலாதுவிடின், அவரை பெயர்குறித்து நியமித்த அரச தரப்பு, அரச தரப்பினரின் பெரும்பான்மையான அங்கிகரித்தலுக்கு அமைவாக, அவரது காலத்தின் எஞ்சிய பாகத்திற்கு செயலாற்ற அதனது நாட்டினத்தவரிடையிலிருந்து வேறொரு நிபுணரை நியமித்தல் வேண்டும். அரச தரப்பினர்களின் அரைப்பகுதி அல்லது மேற்பட்டோர் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தால் முன்மொழியப்பட்ட நியமனம் அறிவிக்கப்பட்ட பின்னர் ஆறு

வாரங்களுள் எதிர்மறையான பதிலளிக்கப்பட்டாலொழிய அங்கீகரிப்பு வழங்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

7. அரச தரப்பினர்கள், குழு உறுப்பினர்கள் குழுக் கடமைகளைப் புரிவதில் கூறப்படும் அவர்களின் செலவுகளுக்கு பொறுப்பாதல் வேண்டும்.

## உறுப்புரை 18

1. குழு, அதனது அலுவல்களை இரண்டு வருட காலத்திற்கென தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர்கள் மீள தேர்ந்தெடுக்கப் படலாம்.

2. குழு அதனது சொந்த நடவடி முறை தொடர்பான விதிகளை தாபித்தல் வேண்டும். ஆனால் இத்தகைய விதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:

(அ) ஆறு உறுப்பினர்கள் கூட்ட நடப்பெண் ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

(ஆ) குழுவின் தீர்மானம் சமூகமளித்து வாக்களிக்கும் பெரும்பான்மை வாக்குகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

3. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இச்சமவாயத்தின் கீழான குழுவில் பணிகளை வினைத்திறனாக புரிவதற்கு தேவையான அலுவலர்களையும் வசதிகளையும் வழங்குதல் வேண்டும்.

4. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் குழுவின் ஆரம்பக் கூட்டத்தை கூட்டுதல் வேண்டும். அதனது ஆரம்ப கூட்டத்தின் பின்னர், குழு அதனது நடவடிக்கைமுறை விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய காலங்களில் கூடுதல் வேண்டும்.

5. அரச தரப்பினர் இவ்வுறுப்புரையின் 3 ஆம் பந்தியின் பயனாக ஐக்கிய நாடுகளினால் கூறப்பட்ட அலுவலர் மற்றும் வசதிகளுக்கான செலவு போன்ற ஏதேனும் செலவுகளை ஐக்கிய நாடுகளுக்கு திருப்பிக் கொடுத்தல் உட்பட, தமதும் குழுவினதும் கூட்டங்களை நடாத்துவதுடன் தொடர்பில் கூறப்பட்ட செலவுகளுக்கு பொறுப்பாதல் வேண்டும்.

## உறுப்புரை 19

1. அரச தரப்பினர், சம்பந்தப்பட்ட அரச தரப்புக்கு சமவாயம் அமுலுக்கு வந்தபின் 1 வருடத்தினுள், இச்சமவாயத்தின் கீழ் அவர்களது பொறுப்பேற்புக்களை பயனுற செய்ய அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் மீதான அறிக்கையை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் ஊடாக குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர் அரச தரப்பினர் எவையேனும் புதிதாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீதான துணையாய அறிக்கைகளையும் குழு தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய வேறு அறிக்கைகளையும் ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் எல்லா அரச தரப்பினர்களுக்கும் அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும்.

3. ஒவ்வொரு அறிக்கையும் எக்குழு தோதானதென கருதக்கூடியவாறான அறிக்கை மீதான அத்தகைய பொதுவான குறிப்புரைகளை ஆக்கக்கூடியதோ அக்குழுவினால் கருத்திற்கெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சம்பந்தப்பட்ட அரச தரப்புக்கு அவற்றை அனுப்புதல் வேண்டும். அரச தரப்பு எவையேனும் அவதானிப்புகளுடன் பதிலளிக்கலாம்.

4. குழு அதனது தற்றுணிபில், 24 ஆம் உறுப்புரையுடன் இணங்க, தயாரிக்கப்பட்ட அதனது ஆண்டு அறிக்கையில் இவ்வுறுப்புரையில் 3 ஆம் பந்திக்கு இணங்க, அதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் குறிப்புரைகளை சம்பந்தப்பட்ட அரச தரப்பிடமிருந்து பெறப்பட்ட அதன் மீதான அவதானிப்புக்களையும் சேர்த்து உள்ளடக்க தீர்மானிக்கலாம். சம்பந்தப்பட்ட அரச தரப்பினால் அவ்வாறு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டால், குழுவானது இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்றையும் உள்ளடக்கலாம்.

## உறுப்புரை 20

1. குழு, சித்திரவதை அரச தரப்பின் ஆள்புலத்தில் ஒழுங்குமுறையாக செய்யப்படுகின்றது என நன்கு கண்டுபிடிக்கப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் கொண்டிருப்பதாக அதற்கு தோன்றுகின்ற நம்பத்தகு தகவலை பெற்றால், குழு தகவலைப் பரீட்சிப்பதில் அந்த அரச தரப்பை அழைத்தல் வேண்டுமென்பதுடன் சம்பந்தப்பட்ட தகவல் தொடர்பான அவதானிப்புகள் அதன் முடிவில் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சம்பந்தப்பட்ட அரச தரப்பினால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கக்கூடிய எவையேனும் அவதானிப்புக்களையும் குழுவுக்கு கிடைக்கக்கூடிய ஏதேனும் வேறு பொருத்தமான தகவலையும் கருத்திற்கொண்டு, குழுவானது இது அவசியமானது என உறுதிப்படுத்தப்பட்டதென தீர்மானித்தால் இரகசிய விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கும் அவசரமாக குழுவுக்கு அறிக்கையிடுவதற்கும் அதனது உறுப்பினர்களில் ஒன்று அல்லது மேற்பட்டவர்களைப் பதவிப்பெயர் குறித்துவிடலாம்.

3. விசாரணையொன்று இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்திக்கிணங்க மேற்கொள்ளப்பட்டால், குழுவானது சம்பந்தப்பட்ட அரச தரப்பினர் ஒத்துழைப்பை தேடிப்பெறுதல் வேண்டும். அந்த அரச தரப்புடனான உடன்பாட்டில், அத்தகைய விசாரணையொன்று அதனது ஆள்புலத்திற்கான செல்லுகையொன்றையும் உள்ளடக்கலாம்.

4. பரீட்சிப்பின் பின்னர், இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்திக்கிணங்க சமர்ப்பிக்கப்பட்ட அதனது உறுப்பினர் அல்லது உறுப்பினர்களின் முடிவுகளுடன் சூழ்நிலையின் நோக்கில் தோதானதென தோன்றுகின்ற எவையேனும் குறிப்புரைகள் அல்லது யோசனைகளுடன் சேர்த்து சம்பந்தப்பட்ட அரச தரப்புக்கு அனுப்புதல் வேண்டும்.

5. இவ்வுறுப்புரையில் 1 தொடக்கம் 4 வரையான பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட குழுவின் எல்லா நடவடிமுறைகளும், இரகசியமானதாதல் வேண்டும். அத்துடன் நடவடிமுறைகளின் எல்லாக் கட்டங்களிலும் அரச தரப்பின்

ஒத்துழைப்பு பெறப்படுதல் வேண்டும். 2 ஆம் பந்திக்கிணங்க விசாரணையொன்று தொடர்பில் அத்தகைய நடவடிமுறைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் குழுவானது, சம்பந்தப்பட்ட அரச தரப்புடனான கலந்துரையாடலின் பின்னர் 24 ஆம் உறுப்புரைக்கிணங்க, ஆக்கப்பட்ட அதனது ஆண்டு அறிக்கையில் நடவடிக்கை முறையின் விளைவின் சுருக்கமொன்றை உள்ளடக்க தீர்மானிக்கலாம்.

## உறுப்புரை 21

1. அரச தரப்பொன்று, இன்னொரு அரச தரப்பு இச் சமவாயத்தின் கீழான அதனது கடப்பாடுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்க வில்லை என கோருவதை பயனுறச் செய்வதற்கு தொடர்பாடல் களைப் பெறுவதற்கும் கருத்திற் கெடுப்பதற்கும் குழுவுக்கான தகைமையை அது அங்கீகரிக் கின்றது என இவ்வுறுப்புரையின் கீழ் எந்நேரத்திலும் பிரகடனம் செய்து வெளிப்படுத்தலாம். அத்தகைய தொடர்பாடல்கள் எந்த அரச தரப்பு குழுவின் தகுதி தொடர்பில் அங்கீகரிக்கின்ற பிரகடனத்தைச் செய்திருக் கின்றதோ அந்த அரச தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே இவ்வுறுப்புரையில் இடப்பட்ட நடவடிமுறை களுக்கிணங்க பெறப்படலாமென்பதுடன் கருத்திற் கெடுக்கவும் படலாம், எந்த தொடர்பாடலும் எந்த அரச தரப்பு அத்தகைய பிரகடனமொன்றை செய்திருக்காத அரச தரப்புடன் சம்பந்தப்படுகின்றதானால் இவ்வுறுப்புரையின் கீழ் குழுவினால் அணுகப்படலாகாது. இவ்வுறுப்புரையின் கீழ் பெறப்பட்ட தொடர்பாடல்கள் பின்வரும் நடவடிமுறைகளுக் கிணங்க கையாளப்படுதல் வேண்டும்.

(அ) வேறொரு அரச தரப்பு இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு பயனைக் கொடுக்கவில்லை என ஒரு அரச தரப்பு கருதினால், அது அந்த அரச தரப்பின் கவனத்திற்கு அவ்விடயத்தை எழுத்துமூலமான தொடர்பாடல் மூலம் கொண்டுவரலாம். தொடர்பாடல் கிடைக்கப்பெற்று மூன்று மாதங்களுள் பெற்ற அரசு தொடர்பாடலை அனுப்பிய அரசுக்கு விளக்கமொன்றை அல்லது சாத்தியமானதும் குறிப்பிடத்தக்கதுமான அளவிற்கு உள்நாட்டு நடவடிமுறைகள் மற்றும் எடுக்கப்பட்ட நிவாரணங்கள் விடயத்தில் நடாத்தப்படுகின்ற அல்லது கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் பற்றிய குறிப்பீடுகளை உள்ளடக்கு வதான விடயங்களை தெளிவுபடுத்தி எழுத்திலான ஏதேனும் வேறு கூற்றுக்களையும் அனுப்புதல் வேண்டும்;

(ஆ) ஆரம்ப தொடர்பாடலைப் பெறுகின்ற அரசினால் பெற்ற பின்னர் ஆறு மாதங்களுள் சம்பந்தப்பட்ட இரு அரச தரப்பினருக்கும் திருப்தியாக விடயம் சீர்செய்யப்பட வில்லையானால், இரண்டில் ஒரு அரசு, குழுவுக்கும் மற்றைய அரசுக்கும் தரப்பட்ட அறிவித்தல் மூலம் குழுவுக்கு விடயத்தை ஆற்றுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது;

(இ) குழுவானது, எல்லா உள்நாட்டு நிவாரணங்களும் விடயத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் முழுமையாக முடிவாக்கப்பட்டிருக்கிறது என ஆராய்ந்தறிந்திருந்த

தன் பின்னர் மட்டுமே இவ்வுறுப்புரையின் கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயத்துடன் சர்வதேச சட்டத்தினால் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கிணங்க கையாளுதல் வேண்டும். நிவாரணத்திற்கான விண்ணப்பம் நியாயமற்ற ரீதியாக காலம் தாழ்த்தப்பட்டுள்ளவிடத்து அல்லது எவர் இச் சமவாயத்தின் மீறுகையினால் பாதிக்கப்பட்டவராக இருக்கின்றாரோ அந்த ஆள் பயனுள்ள நிவாரணத்தைத் தருமென எதிர்பார்க்கப்படாதவிடத்து, இதுவிதியாக இருத்தலாகாது;

(ஈ) குழுவானது, இவ்வுறுப்புரையின் கீழ் தொடர்பாடல்களைப் பரீட்சிக்கும்போது மூடிய கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்,

(உ) (இ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக குழுவானது, இச்சமவாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கடப்பாடுகளுக்கான மதிப்பின் அடிப்படை மீது விடயத்தில் சிநேகபூர்வ தீர்வுக்கான நோக்குடன் சம்பந்தப்பட்ட அரச தரப்பினர்களுக்கு அதனது சிறந்த அலுவலகத்தை கிடைக்கக்கூடியதாக செய்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, குழுவானது தோதானபோது இணக்க ஆணைக்குழுவொன்றை உருவாக்கலாம்;

(ஊ) இவ்வுறுப்புரையின் கீழ் குழுவுக்கு ஆற்றப்படுத்தப்பட்ட விடயத்தில், அது ஏதேனும் பொருத்தமான தகவலை வழங்குவதற்கு (ஆ) எனும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட அரச தரப்புகளை அழைக்கலாம்;

(எ) குழுவானது, (ஆ) எனும் உட்பந்தியின் கீழ் அறிவித்தல் பெறப்பட்ட திகதிக்கு பின்னர் பன்னிரண்டு மாதங்களுள் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்;

(i) (உ) எனும் உட்பந்தியின் வாசகங்களுக்குள் தீர்வொன்று அடையப்பட்டால், குழு அதனது அறிக்கையை நிகழ்வினதும் அடையப்பட்ட தீர்வினதும் சுருக்க கூற்றொன்றுக்கு மட்டுப்படுத்துதல் வேண்டும்;

(ii) (உ) எனும் உட்பந்தியின் வாசகங் களுக்குள் தீர்வொன்று அடையப்படா விட்டால், குழுவானது அதனது அறிக்கையை நிகழ்வுகளின் சுருக்கக் கூற்றொன்றுக்கு மட்டுப்படுத்துதல் வேண்டும், அத்துடன் சம்பந்தப்பட்ட அரச தரப்பினரால் செய்யப்பட்ட எழுத்து மூலமான சமர்ப்பணங்களும் வாய் மொழி மூல சமர்ப்பணங்களின் பதிவும் அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விடயத்திலும், அறிக்கையானது சம்பந்தப்பட்ட அரச தரப்புகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

2. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள், இச்சமவாயத்திற்கான ஐந்து அரச தரப்பினர்கள் இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் பிரகடனங்களைச் செய்திருக்கின்றபோது வலுவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய பிரகடனங்கள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் அரச தரப்பினரால் வைப்பிலிடப்படுதல் வேண்டும். அவர் வேறு அரச தரப்பினருக்கு அதன் பிரதிகளை அனுப்புதல் வேண்டும். பிரகடனமொன்று செயலாளர் நாயகத்திற்கான அறிவித்தல் மூலம் எந்நேரத்திலும் மீளப்பெறப்படலாம், அத்தகைய மீளப்பெறல் ஒன்று ஏதேனும் விடயம் இவ்வுறுப்புரையின் கீழ் ஏற்கனவே அனுப்பப்பட்ட தொடர்பாடலுக்கு அமைய, அவ் விடயம் மீதான கருத்திற்கெடுப்பதை பங்கப்படுத்தலாகாது; சம்பந்தப்பட்ட அரச தரப்பு புதிய பிரகடனமொன்றை செய்தாலொழிய, பிரகடனத்தை மீளப்பெறும் அறிவித்தல் செயலாளர் நாயகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இவ்வுறுப்புரையின் கீழ் ஏதேனும் அரச தரப்பினால் மேலும் எந்தத் தொடர்பாடலும் பெறப்படலாகாது.

## உறுப்புரை 22

1. இச்சமவாயத்திற்கான அரச தரப்பொன்று, எவர் இச்சமவாய ஏற்பாடுகள் அரச தரப்பினால், அதனது நியாயாதிக்கத்திற்கு அமைய, மீறுகையினால் பாதிக்கப்பட்டவராக கோருகின்றாரோ அவரிடமிருந்து அல்லது தனிப்பட்டவர்கள் சார்பில் தொடர்பாடல்களை பெறுவதற்கும் கருத்திற்கெடுப்பதற்குமாக குழுவின் தகைமையை அங்கீகரிக்கிறது என இவ்வுறுப்புரையின் கீழ் எந்நேரத்திலும் பிரகடனம் செய்யலாம். எந்த தொடர்பாடலும், எந்த அரச

தரப்பு அத்தகைய பிரகடனமொன்றை செய்திருக்காதுள்ளதோ அந்த அரச தரப்புடன் சம்பந்தப்பட்டிருந்தால் குழுவினால் பெறப்படுதலாகாது.

2. குழுவானது, அநாமதேயமான அல்லது அத்தகைய தொடர்பாடல்கள் சமர்ப்பினர் உரிமையின் துஷ்பிரயோகமொன்றென அது கருதுகின்ற அல்லது இச்சமவாய ஏற்பாடுகளுடன் இசைவற்றதான இவ்வுறுப்புரையின் கீழான ஏதேனும் தொடர்பாடலை ஏற்கத்தகாதவையாக கருதுதல் வேண்டும்.

3. இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ்அதற்கு சமர்ப்பிக்கப்பட்ட எவையேனும் தொடர்பாடல்களை எந்த அரச தரப்பு 1 ஆம் பந்தியின் கீழ் பிரகடனமொன்றை செய்திருப்பதுடன் சமவாயத்தின் எவையேனும் ஏற்பாடுகளை மீறிக்கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறதோ அந்த அரச தரப்பின் கவனத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். ஆறு மாதங்களுள் பெறுகின்ற அரசு எழுத்திலான விளக்கத்தை அல்லது விடயத்தையும் நிவாரணங்கள் இருந்தால் அரசினால் எடுக்கப்பட்ட நிவாரணங்கள் என்பவற்றை வேறுபடுத்துகின்ற கூற்றுக்களையும் குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

4. குழுவானது, தனிப்பட்டவரால் அல்லது தனிப்பட்டவர் சார்பில் அத்துடன் சம்பந்தப்பட்ட அரச தரப்பினால் அதற்கு கிடைக்கக்கூடியதாக செய்யப்பட்ட எல்லா தகவல்களின் நோக்கில் இந்த உறுப்புரையின் கீழ் பெறப்பட்ட தொடர்பாடலை கருத்திற்கெடுத்தல் வேண்டும்.

5. குழுவானது, பின்வருவனவற்றை அறிந்திருந்தாலொழிய இவ்வுறுப்புரையின் கீழ் தனிப்பட்ட ஒருவரிடமிருந்து எவையேனும் தொடர்பாடல்களை கருத்திற் கெடுத்தலாகாது.

(அ) அதே விடயம் வேறொரு சர்வதேச புலன்விசாரணை அல்லது இணக்கத் தீர்வின் நடவடிமுறையின் கீழ் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை அத்துடன் பரீட்சிக்கப் பட்டுக் கொண்டிருக்கவில்லை;

(ஆ) தனிப்பட்டவர் கிடைக்கக்கூடிய எல்லா உள்நாட்டு நிவாரணங்களை முடித்திருக்கிறார்; நிவாரணத்திற்கான விண்ணப்பம் நியாயமற்ற ரீதியில் காலம் தாழ்த்தப்பட்டுள்ளவிடத்து அல்லது எவர் இச் சமவாயத்தின் மீறுகையால் பாதிக்கப்பட்டவராக இருக்கின்றாரோ அந்த ஆள் பயனுள்ள நிவாரணத்தை தருமென எதிர்பார்க்க முடியாதுள்ளவிடத்து இது விதியாக இருத்தலாகாது.

6. குழுவானது, இவ்வுறுப்புரையின் கீழ் தொடர்பாடல்களை பரீட்சிக்கும் போது மூடிய கூட்டங்களை நடாத்தல் வேண்டும்.

7. குழுவானது, அதனது நோக்குகளை சம்பந்தப்பட்ட அரச தரப்பு மற்றும் தனிப்பட்டவருக்கு அனுப்புதல் வேண்டும்.

8. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள், இச்சமவாயத்திற்கான ஐந்து அரச தரப்பினர்கள் இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கீழ் பிரகடனங்களை செய்திருக்கின்றபோது வலுவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய பிரகடனங்கள் ஐக்கிய நாடுகள்

செயலாளர் நாயகத்துடன் அரச தரப்பினரால் வைப்பிலிடப்படுதல் வேண்டும், அவர் வேறு அரச தரப்பினருக்கு அதன் பிரதிகளை அனுப்புதல் வேண்டும். பிரகடனமொன்று செயலாளர் நாயகத்திற்கான அறிவித்தல் மூலம் எந்நேரத்திலும் மீளப்பெறப்படலாம். அத்தகைய மீளப்பெறல் ஒன்று ஏதேனும் விடயத்தில் இவ்வுறுப்புரையின் கீழ் ஏற்கனவே அனுப்பப்பட்ட தொடர்பாடலுக்கமைய, அவ்விடயம் மீதான கவனிப்பை பங்கப்படுத்தலாகாது; சம்பந்தப்பட்ட அரச தரப்பு புதிய பிரகடனமொன்றை செய்தாலொழிய, பிரகடனத்தை மீளப்பெறும் அறிவித்தல் செயலாளர் நாயகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இவ்வுறுப்புரையின் கீழ் ஏதேனும் அரச தரப்பினால் மேலும் எந்த தொடர்பாடலும் பெறப்படலாகாது.

## உறுப்புரை 23

குழு மற்றும் 21 ஆம் உறுப்புரையின் 1 (உ) எனும் பந்தியின் கீழ் நியமிக்கப்படக்கூடிய குறித்த நோக்கத்திற்கான இணக்க ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகளின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகள் மீதான சமவாயத்தின் பொருத்தமான பிரிவுகளில் இடப்பட்டவாறாக ஐக்கிய நாடுகளுக்கான குழுவின் நிபுணர்களுக்கான வசதிகள் சிறப்புரிமைகள் விடுபாட்டுரிமைகள் என்பவற்றுக்கு உரித்துடையவர்கள்.

## உறுப்புரை 24

குழுவானது இச் சமவாயத்தின் கீழான அரச தரப்பினர்களுக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கும் அதனது நடவடிக்கைகள் மீதான ஆண்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## பாகம் 3

## உறுப்புரை 25

1. இச் சமவாயம் எல்லா அரசுகளாலும் கையெழுத்திடுவதற்காக திறந்துள்ளது.

2. இச் சமவாயம் பின்னுறுதிப்படுத்தலுக்கு அமைவானது. பின்னுறுதிப்படுத்தல் ஆவணம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை 26

இச் சமவாயம் எல்லா அரசுகளாலும் ஏற்பதற்காக திறந்துள்ளது. ஏற்பு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் ஏற்பு ஆவணத்தை வைப்பு செய்வதன் மூலம் பயனுறச் செய்யப்படுதல் வேண்டும்.

## உறுப்புரை 27

1. இச் சமவாயம், பின்னுறுதிப்படுத்தல் அல்லது ஏற்பின் இருபதாவது ஆவணம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் வைப்புச் செய்யப்பட்ட திகதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

2. பின்னுறுதிப்படுத்தல் அல்லது ஏற்பின் இருபதாவது ஆவணம் வைப்பு செய்யப்பட்ட பின் இச் சமவாயத்தை பின்னுறுதிப் படுத்துகின்ற அல்லது அதை ஏற்கின்ற ஒவ்வொரு அரசுக்காகவும் அதனது சொந்த பின்னுறுதிப்படுத்தல் அல்லது ஏற்பு ஆவணம் வைப்புத் திகதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

## உறுப்புரை 28

1. ஒவ்வொரு அரச தரப்பும் இச் சமவாயத்தை பின்னுறுதிப்படுத்தும் அல்லது கையெழுத்திடும் அல்லது அதனை ஏற்கும் எந்நேரத்திலும் அது 20 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்ட குழுவின் தகைமையை அங்கீகரிப்ப தில்லை என பிரகடனம் செய்யலாம்,

2. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்திக்கிணக்க ஒதுக்கீடொன்றை செய்து கொண்டுள்ள ஏதேனும் அரச தரப்பு எந் நேரத்திலும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு அறிவிப்பதன் மூலம் இந்த ஒதுக்கீட்டை மீளப் பெறலாம்.

## உறுப்புரை 29

1. இச் சமவாயத்திற்கான ஏதேனும் அரச தரப்பு திருத்தமொன்றை முன்மொழிவு செய்யலாமென்பதுடன் அதனை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் கோப்பிடலாம். செயலாளர் நாயகம், முன்மொழிவை கருத்திற்கெடுக்கவும் அதன் மீதான வாக்கெடுப்பிற்கான நோக்கத்திற்காக, அந்த தரப்பினரின் மகாநாடொன்றுக்கு அவர்கள் சார்பாக உள்ளனரா என்பதை அவர்கள் தனக்கு அறிவிக்கலாம் என்ற வேண்டுகோளொன்றுடன் அரச தரப்பினர்களுக்கு முன்மொழிவு செய்யப்பட்ட திருத்தத்தை அறிவிக்கலாம், அத்தகைய தொடர்பாடலின் திகதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள்ளாக அத்தகைய மகாநாட்டிற்கு மூன்றில் ஒரு பங்கு அரச தரப்பினர் சார்பாக இருக்கும் பட்சத்தில், செயலாளர் நாயகம், ஐக்கிய நாடுகளின் ஆதரவின் கீழ் மகாநாட்டைக் கூட்டுதல் வேண்டும். மகாநாட்டில் சமுகமளித்து வாக்களித்த அரச தரப்பினரின் பெரும்பான்மையினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தம் செயலாளர் நாயகத்தினால் எல்லா அரச தரப்பினரதும் ஏற்புக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்திக்கிணங்க சேர்த்துக் கொள்ளப்பட்ட திருத்தமொன்று, இச் சமவாயத்திற்கு அரச தரப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தாம் தத்தமது அரசியலமைப்பு நடவடிமுறைகளுடன் இணங்க அது ஏற்கப்படுகிறது என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு அறிவித்திருக்கின்றபோது வலுவுக்கு வருதல் வேண்டும்.

3. திருத்தங்கள் வலுவுக்கு வருகின்ற போது, அவை எந்த அரச தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவோ அந்த அரச தரப்புக்களை கட்டுப்படுத்துதல் வேண்டும். ஏனைய அரச தரப்பினர் சமவாய ஏற்பாடுகளாலும் எந்த திருத்தங்கள் அவர்கள் ஏற்றிருக்கிறார்களோ அந்த ஏதேனும் முன்னைய திருத்தங்களாலும் இதுவரை கட்டுப்படுத்தப்படுவார்கள்.

## உறுப்புரை 30

1. இச் சமவாயத்தின் பொருள்கோடல் அல்லது ஏற்புடைமை சம்பந்தமாக இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அரச தரப்புகளிடையே உள்ள எந்த பிணக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட முடியாதுள்ளதோ அப்பிணக்கு, அவர்களில் ஒருவரின் வேண்டுகோளில், நடுத்திர்ப்புக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நடுத்தீர்ப்புக்கான வேண்டுகோள் திகதியிலிருந்து ஆறு மாதங்களுள் அரச தரப்பினர் நடுத்தீர்ப்பு அமைப்பு மீது உடன்பட முடியாதிருந்தால், அத் தரப்பினர்களுள் எவரேனும் ஒருவர் சர்வதேச நீதிமன்ற நியதிச் சட்டத்திற்கு இசைவான வேண்டுகோளினால் பிணக்கை அந் நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

2. ஒவ்வொரு அரசும் இச் சமவாயத்தை கையெழுத்திடுதல் அல்லது பின்னுறுதிப்படுத்தல் அல்லது அதற்கான ஏற்பு நேரத்தில், அது இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியினால் தான் கட்டுப்படக் கருதவில்லை என பிரகடனம் செய்யலாம். வேறு அரச தரப்பினர் அத்தகைய ஒதுக்கீடொன்றை செய்து கொண்டிருக்கின்ற ஏதேனும் அரச தரப்பு தொடர்பில் இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியால் கட்டுப்படுத்தப்படுதலாகாது.

3. இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்திக்கிணங்க ஒதுக்கீடு செய்து கொண்டுள்ள ஏதேனும் அரச தரப்பு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கான அறிவித்தல் மூலம் எந்நேரத்திலும் இந்த ஒதுக்கீட்டை மீளப் பெறலாம்.

## உறுப்புரை 31

1. அரச தரப்பொன்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு எழுத்திலான அறிவிப்பு மூலம் இச் சமவாயத்தை கைதுறக்கலாம். கைதுறத்தல் செயலாளர் நாயகத்தால் அறிவித்தல் பெற்ற திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் பயனுறுவதாக வரும்.

2. அத்தகைய கைதுறத்தலொன்று பயனுறுவதாக வருகின்ற திகதிக்கு முன்னைய ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் இச் சமவாயத்தின் கீழ் அதனது கடப்பாடுகளிலிருந்து அரச தரப்பை விடுவிக்கின்ற பயனைக் கொண்டிருத்தலாகாது. அத்துடன் கைதுறத்தல் பயனுறுவதாக வருவதற்கு முன்னைய திகதியில் குழுவினால் ஏற்கனவே எந்த விடயம் பரிசீலனையில் உள்ளதோ அந்த விடயம் மீதான தொடர்ச்சியான பரிசீலனை கைதுறத்தலால் பங்கப்படலாகாது.

3. அரச தரப்பினர் கைதுறத்தல் பயனுறுவதாக வருகின்ற திகதியின் பின்னர், குழு, அந்த அரசு தொடர்பாக ஏதேனும் புதிய விடயங்களின் பரிசீலனையை ஆரம்பித்தலாகாது.

## உறுப்புரை 32

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் அனைத்திற்கும் எந்நாடுகள் இச் சமவாயத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன அல்லது ஏற்புச் செய்திருக்கின்றனவோ அவ்வரசுகளுக்கும் பின்வருவனவற்றை அறிவித்தல் வேண்டும்.

அ. இருபத்தைந்தாம் மற்றும் 26 ஆம் உறுப்புரைகள் கீழான கையெழுத்திடல்கள், பின்றுதிப்படுத்தல்கள், மற்றும் ஏற்புக்கள்.

ஆ. இருபத்தேழாம் உறுப்புரையின் கீழ் இச் சமவாயம் அமுலுக்கு வருகின்ற திகதி அத்துடன் 29 ஆம் உறுப்புரையின் கீழான ஏதேனும் திருத்தங்கள் வலுவுக்கு வருகின்ற திகதி.

இ. முப்பத்தோராம் உறுப்புரையின் கீழான கைதுறத்தல்கள்

## உறுப்புரை 33

1. இச் சமவாயத்தின் சமத்துவமான அதிகாரமுடைய அராபிய, சீனா, ஆங்கிலம், பிரான்சு, ரஷ்ய மற்றும் ஸ்பானிய மொழிகள் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

2. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் எல்லா அரசுகளுக்கும் இச் சமவாயத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

# அத்தியாயம் 3

## அடிப்படை உரிமைகள்

சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதசுதந்திரம் என்பன

10. ஆளொவ்வொருவரும், தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்

சித்திரவதைக் குள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம்.

11. ஆளெவரும் சித்திரவதைக்கு, அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது.

சமத்துவத்துக் கான உரிமை

12. (1) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுபவதற்கும் உரித்துடையவர்கள்.

(2) இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது;

ஆயின், பகிரங்க சேவையில், நீதித்துறைச் சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில், அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் சேவையில் உள்ள ஏதேனும் ஊழியத்திற்கான அல்லது பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் மொழியை அறிந்திருத்தல் நியாயமாக அவசியமானதாகவுள்ள விடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான தகைமையாக அம்மொழியில் போதிய அறிவை நியாயமான காலத்தினுள் பெறுதல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்ட முறையானதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஊழியத்திற்கான அல்லது பதவிக்கான பணிகளுள் எவற்றையும் ஏதேனும் மொழியை அறிந்திருந்தால் தவிர வேறு விதத்தில் நிறைவேற்ற முடியாமலிருக்குமிடத்து, அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கு அல்லது பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான தகைமையாக அம்

மொழியில் போதிய அறிவை உடையவராக இருத்தல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) எந்த ஆளும், இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும், கடைகள், பொது உணவுச் சாலைகள், விடுதிகள், பொதுக் களியாட்டவிடங்கள், தனது மதத்துக்குரிய பொது வழிபாட்டிடங்கள் என்பவற்றிற்குச் செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்துக்கு, பொறுப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது நிபந்தனைக்கு உட்பட்டவராதலாகாது.

(4) இவ்வுறுப்புரையிலுள்ளவெதுவும், பெண்களின், பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக, சட்டத்தின் மூலம், துணைநிலைச் சட்டவாக்கத்தின் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்படுவதைத் தடுத்தலாகாது.

எதேச்சையாகக் கைதுசெய்யப்படாமலும் தடுத்துவைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும் கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயனுடையவையான தண்டனைச் சட்டங்களைத் தடைசெய்தலும்

13. (1) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக் கிணங்கவன்றி, ஆளெவரும் கைதுசெய்யப்படுதலாகாது. கைது செய்யப்படுதற்கான காரணம் கைது செய்யப்படும் எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டுக்காவலில் வைத்திருக்கப்படும், தடுத்துவைத் திருக்கப்படும். அல்லது வேறுவகையில் சொந்தச் சுதந்திரம் பறிக்கப் பட்டிருக்கும் ஒவ்வோராளும், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக் கிணங்க மிக்க அண்மையிலுள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக் கிணங்க அத்தகைய நீதிபதியினால் ஆக்கப்படும் கட்டளைப்படியன்றியும் அதன் நியதிகளுக்கிணங்கவன்றியும், தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைத்திருக்கப் படுதலோ, தடுத்துவைக்கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது.

(3) தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எவரேனுமாள், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்கத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளையின் மூலமாகவன்றி, ஆள் எவரும், மரண தண்டனையினால் அல்லது மறியற் றண்டனையினால் தண்டிக்கப்படுதலாகாது. புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறும் வரையில் ஆளொருவரைக் கைதுசெய்து வைத்திருத்தல், கட்டுக்காவலில் வைத் திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரது சொந்தச் சுதந்திரத்தை வேறு வகையில் பறித்தல் தண்டனையாக அமைத லாகாது.

(5) ஆளொவ்வொருவரும், அவர் குற்றவா ளியென எண்பிக்கப்படும்வரை, சுத்தவா ளியென ஊகிக்கப் படுதல் வேண்டும்: ஆயின், குறிப்பிட்ட நிகழ்வுகளை எண்பிப்பதற்கான பொறுப்பை குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் மீது சட்டம் சுமத்தலாம்.

(6) புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாக விருந்திராத ஏதேனும் செயல் அல்லது செய் யாமை காரணமாக, ஆளெவரும் தவறொன் றுக்குக் குற்றவாளியா தலாகாது என்பதுடன், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டமெதுவும் அத்தகைய ஏதேனும் தவறுக்கு விதிக்கப்படுதலுமாகாது.

தேசங்கள் என்ற சமுதாயத்தினால் அங்கீக ரிக்கப்பட்ட சட்டத்தின் பொதுவான நெறிக ளுக்கிணங்க எச்செயல் அல்லது செய்யாமை, அது புரியப்பட்ட நேரத்தின்போது குற்ற வியலானதாக இருந்திருக்குமோ, அச் செயலுக் காக அல்லது செய்யாமைக்காக எவ ரேனும் ஆளை விளங்குதலையும் அவருக்குத் தண்டனையளித் தலையும் இவ்வுறுப் புரையிலுள்ள எதுவும் பங்கப்படுத்து தலாகாது.

தவறொன்றுக்கு ஆகக்குறைந்த தண்ட மொன்றை விதிக்கும்படி தேவைப்படுத்துதல், அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய தவறுக்கென விதிக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டத்தை அத்தகைய தண்டம் விஞ்சுவதாயில்லாதிருப்பின், இவ்வுறுப் புரையின் மீறுகையாக இருத்தலாகாது.

(7) குடிவருவோர். குடியகல்வோர் சட் டத்தின் அல்லது 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்திய–இலங்கை உடன்படிக்கை (செயற்படுத்தல்) சட்டத்தின் அல்லது அவற் றிற்குப் பதிலாக ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட அகற்றற் கட்டளையின் காரணமாக, அல்லது துறைகடத்தும் கட் டளையின் காரணமக ஆளொருவரைக்

கைதுசெய்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரின் சொந்தச் சுதந்திரத்தை வேறுவகையில் பறித்தல் இவ்வுறுப்புரையை மீறுவதாக அமையாது.

பேச்சுச் சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், முயற்சி செய்வதற்கான சுதந்திரம், நடமாடுவதற்கான சுதந்திரம் முதலியன.

14. (1) ஒவ்வொரு பிரசையும் பின் வருவனவற்றுக்கு உரித்துடையவராவார்:-

(ஆ) வெளியிடுதலுட்பட்ட பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும்;

(ஆ) அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்;

(இ) ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்;

(ஈ) தொழிற் சங்கமொன்றை அமைக்கவும் அதிற் சேரவும் உள்ள சுதந்திரம்;

(உ) தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம்;

(ஊ) தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப் பதற்கும் மேம்படுத்துவதற்கும், அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்து வதற்கும் ஆன சுதந்திரம்;

(எ) ஏதேனும் சட்டமுறையான முயற்சியில், உயர்தொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் தானாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கான சுதந்திரம்;

(ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கும் ஆன சுதந்திரம்; அத்துடன்

(ஐ) இலங்கைக்குத் திரும்பிவருவதற்கான சுதந்திரம்.

(2) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராக இல்லாதிருப்பவரும், இவ்வரசியலமைப்பு தொடங்கு வதற்கு நேர்முன்னர் இலங்கையில் நிரந்தரமாகவும் சட்டப்படியும் வதிவிலிருந்தவரும், தொடர்ந்து அவ்வாறு வதிவிலிருப்பவரும் ஆன ஆளொருவர், அரசியலமைப்பு தொடங்கியதிலிருந்து பத்து ஆண்டுகளைக்கொண்ட ஒரு காலப் பகுதிக்கு இவ்வுறுப்புரையின் (1) ஆம்

பந்தியில் வெளிப்படுத்தி ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகளுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

அடிப்படை உரிமைகளின் மீதான மட்டுப்பாடுகள்.

15. (1) 13 (5) ஆம், 13(6) ஆம் உறுப்புரைகளினால் வெளிப் படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசிய பாதுகாப்பின் நலன்கருதி சட்டத்தினால் விதிக் கப்படக்கூடியவாறான அத்தகை மட்டுப்பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக் கங்களுக்காக " சட்டம்" என்பது பொது மக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளையும் உள்ளடக்கும்.

(2) 14 (1) (அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மான நட்டம் அல்லது தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(3) 4 (1) (அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சமூகவாழ்வு, மதச் சமூகவாழ்வு என்பனவற்றின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(4) 14 (1) (இ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சமூகவாழ்வு, மதச் சமூகவாழ்வு என்பனவற்றின் நலன்கருதி அல்லது தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப் பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(5) 14 (1) (எ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளா தாரத்தின் நலன் கருதியோ அல்லது பின்வருவன தொடர்பிலோ சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப் பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்; அதாவது:-

(அ) ஏதேனும் உயர்தொழிலைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் முயற்சியை, வியாபாரத்தை, தொழிலை அல்லது தொழில் முயற்சியைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமான உயர்தொழில்சார், தொழினுட்பம்சார், கல்விசார், நிதிசார் தகைமைகளும் வேறு தகைமைகளும் என்பன தொடர்பிலும், அத்தகைய அடிப்படை உரிமைக்கு உரித்துடைய ஆட்களுக்கு உரிமமளித்தலும் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் என்பன தொடர்பிலும்; அத்துடன்

(ஆ) முழுக்க முழுக்கப் பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது பகுதியளவில் பிரசைகளை நீக்கிவிட்டோ அல்லது வேறுவகையிலோ ஏதேனும் வியாபாரத்தை, தொழிலை, கைத்தொழிலை சேவையை அல்லது தொழில்முயற்சியை அரசு, அரச முகவர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் கொண்டு நடாத்துதல் தொடர்பிலும்

(6) 14 (1) (எ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி, சட்டத்தினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

(7) 12 ஆம், 13(1) ஆம், 13(2) ஆம் 14 ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா அடிப்படை உரிமைகளினதும் பிரயோகமும் தொழிற்பாடும், தேசிய பாதுகாப்பு, பொது மக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பனவற்றின் நலன்கருதி, அல்லது மற்றவர்களின் உரிமைகள் சுதந்திரங்கள் என்பவற்றிற்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத் துக்காக அல்லது சனநாயகச் சமூகத்தின் பொதுச் சேம நலத்தின் நீதியான தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காகச் சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடு களுக்கு அமைந்தனவாதல் வேண்டும், இப்பந்தியின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்.

(8) 12(1) ஆம், 13 ஆம், 14 ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமை களின் பிரயோகமும் தொழிற்பாடும், அவ்வுரிமைகளை ஆயுதந்தாங்கிய படைகள் பொலிசுப்படை, பொது அமைதிபேணும் பொறு

ப்புடைய ஏனைய படைகள் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு ஏற்புடையனவாக்கும் போது, அத்தகைய படையுறுப் பினர் தத்தமது கடமைகளை முறையாகப் புரிதல், அவர்கட்கிடையே ஒழுக்கக்கட்டுப்பாட்டினைப் பேணுதல் என்பனவற்றின் நலன்கருதிச் சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடு களுக்கு அமைந்தன வாதல் வேண்டும்.

இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் தொடர்ந்தும் வலுவிலிருத்தல்.

16. (1) இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற் பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த ஒரு நிதிமன்றத்தின் கட்டளையின் பேரில் எவரேனும் ஆளை, இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவிதமான ஒரு தண்டனைக்கேனும் உள்ளாக்குதல், இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகாது

ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கெதிரான பரிகாரம்.

17. ஆளொவ்வொருவரும், இந்த அத்தியாயத்தினது ஏற்பாடுகளின் கீழ் அவருக்குரித்தாக வுள்ள அடிப்படை உரிமை யானது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அல்லது நிருவாக நடவடிக்கை மூலம் மீறப்பட்டமை தொடர்பில், அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் 126 ஆம் உறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாறான உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப் பிப்பதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

இலங்கைச்

சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டம்

(1994 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,
சித்திரவதை மற்றும் வேறு
கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது
கீழ்த்தரமாக
நடத்துதல் அல்லது தண்டித்தல்
என்பவற்றிற்கெதிரான
சமவாயச் சட்டம்

(1994 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

ச.வ $\frac{8/94}{4188}$

சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பனவற்றிற்கெதிரான சமவாயத்திற்குப் பயனளிப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஆனதொரு சட்டம்

சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பனவற்றிற்கெதிரான சமவாயமொன்று 1994 திசெம்பர் 10 ஆம் திகதி நியூயோர்க்கில் கைச்சாத்திடப்பட்டதாதலாலும்:

அத்துடன் 1993 திசெம்பர் 14 ஆம் திகதியுடையதும் 1993 திசெம்பர் 29 ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பொதுச் செயலாளரிடம் வைப்பீடு செய்யப்பட்டதுமான இணக்கச் சாதனம் ஒன்றின் மூலம் மேற்கூறப்பட்ட சமவாயத்துக்கு இலங்கை இணங்கியுள்ளதாதலாலும்:

அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயம், 1994 பெப்ருவரி 2 ஆம் திகதியிலிருந்து இலங்கைக்காக வலுவுக்கு வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயத்தின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயனளிப்பதற்கு சட்டவாக்க ஏற்பாடு செய்வது அவசியமாகியுள்ளது. ஆதலாலும்:

ஆகவே, இப்போது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம் 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பனவற்றிற்கெதிரான சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சித்திரவதை தவறொன்றாதல்

2. (1) வேறு எவரேனும் ஆளைச் சித்திரவதை செய்யும் ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான தவறொன்றைப்,

(அ) புரிய எத்தனிக்கின்ற;

(ஆ) புரிவதில் உடந்தையாயிருக்கின்ற அல்லது ஒத்தாசை புரிகின்ற;

(இ) புரிய சூழ்ச்சி செய்கின்ற; எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆளை தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றின், மீது எழுத்திலானான சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விதமான தண்டனைக்கு உட்படுத்துவது (1) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றாக அமையமாட்டாது எனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆளொருவர் மேல்நீதிமன்றத்திலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன் மேல் எழு

ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனையுடனும் அத்துடன் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுடனும் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் கீழான தவறொன்று, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றி கைது செய்யத்தகு தவறொன்றும் பிணையில் விடமுடியாத தவறொன்றும் ஆதல் வேண்டும்.

3. ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் ஏதேனும் செயல்:—

(அ) போர் நிலைமை, போரின் அச்சுறுத்தல், உள்ளூர் அரசியல் உறுதி நிலையற்ற தன்மை அல்லது ஏதேனும் பொதுமக்கள் அவசரகால நிலைமையொன்று நிலவிய ஒரு நேரத்தில்;

(ஆ) உயர் அலுவலர் ஒருவரின் பகிரங்க அதிகாரி ஒருவரின் கட்டளையொன்றின் மீது புரியப்பட்டது என்ற நிகழ்வு அத்தகைய தவறுக்கு எதிர்காப்பொன்றாதல் ஆகாது.

இச்சட்டத்தின் கீழ் இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட தவறுகளை விளங்குவதற்கு மேல் நீதிமன்றத்திற்குள்ள நியாயாதிக்கம்.

4. (1) ஆளொருவரால், அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவராக இருப்பினுஞ்சரி அல்லா விடினுஞ்சரி, ஏதேனும் விடயத்தில்:-

(அ) தவறாளர் இலங்கையில் இருக்குமிடத்து அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கப்பலொன்றில் அல்லது வானூர்த்தியொன்றில் இருக்குமிடத்து;

(ஆ) தவறைப் புரிந்துள்ளதாக சார்த்துரைக்கப்பட்ட ஆள் இலங்கைப் பிரசையொருவராக இருக்குமிடத்து; அல்லது

(இ) எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டுள்ளதாக சார்த்துரைக்கப்பட்டதோ அந்த ஆள் இலங்கைப் பிரசையொருவராக இருக்குமிடத்து:-

இலங்கை மேல்நீதிமன்றமானது, இலங்கையின் ஆள் புலத்துக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்தில் புரியப்பட்ட இச்சட்டத்தின் கீழான தவறொன்றை விசாரிப்பதற்கும் விளங்குவதற்குமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இலங்கைப் பிரசையொருவரல்லாத ஆளொருவரால் இலங்கையின் ஆள் புலத்துக்கு வெளியே புரியப்பட்ட இச்சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பில் இலங்கை மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமானது பிரதம நீதியரசரால் அவரது கைப்பட எழுத்தினாலான பணிப் பொன்றினால் பெயர் குறித்து நியதிக்கப்பட்ட நீதி வலயத்தில் நடைபெறும் மேல் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

5. எவையேனும் குற்றவியல் நடவடிக்கைகளில் வேறுவகையில் எல்தகவல்லாத குற்ற ஒப்புதலொன்று, இச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளில் அத்தகைய குற்ற ஒப்புதல் செய்யப்பட்டதென்ற நிகழ்வை எண்பிக்கும் நோக்கத்திற்காக மட்டும் எல்தகவாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட குறித்த சில ஆட்களின் உரிமைகள்.

6. இலங்கைப் பிரசையொருவராக அல்லாத ஆளொருவர், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்காக கைது செய்யப்படுமிடத்து, அவர் அப்போது, எந்த அரசின் நாட்டினர் ஒருவராக அவர் இருக்கின்றாரோ அந்த அரசின் கிட்டிய தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆளொருவராக

இருப்பின், அவர் வழமையாக வதியும் அரசின் கிட்டிய தோதான பிரதிநியுடன் தாமதமின்றி தொடர்புகொள்ளும் உரித்துடையவராதல் வேண்டும்.

*தவறொன்றின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள வேறு அரசுகளுக்கு அறிவிப்பதற்கு அமைச்சருக்குள்ள கடமை.*

7. (1) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்காக ஆளொருவர் கைது செய்யப்படுமிடத்து, வெளிநாட்டு விவகாரங்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கு அல்லது அவரை நாடுகடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுக்க உத்தேசிக்கும் வழிமுறைகளைப் பற்றி, அத்தவறின் மீது, நியாயாதிக்கம் கொண்டுள்ள வேறு ஏதேனும் அரசிலுள்ள இயைபான அலுவலர் களுக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) சித்திரவதை என்னும் தவறுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளை நாடு கடத்துவதற்கு ஏதேனும் அரசின் அரசாங் கத்தால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்திற்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்படுமிடத்து, வெளிநாட்டு விவகா ரங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத்தவறுக்காக அத்தகைய

ஆளுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கு அல்லது அவரை நாடுகடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளதோ அல்லது எடுக்க உத்தேசிக்கின்றதோ அந்த நடவடிக்கைகளைபற்றி, வேண்டுகோள் விடுக்கும் அரசின் அரசாங்கத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) சித்திரவதை என்னும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளை நாடுகடத்துவதற்கு ஏதேனும் அரசின் அரசாங் கத்தால் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகடத்தல் சட்டத்தின் கீழான வேண்டுகோள் ஒன்றைப் பின்பற்றி கட்டளை யெதுவும் விடுக்கப்படக்கூடாது என முடிவு செய்யப்படுமிடத்து, எந்தத் தவறுக்காக அத்தகைய ஆள் குற்றஞ்சாட்டப்படு கின்றாரோ அந்தத் தவறுக்காக வழக்குத் தொடுப்பதற்காக அல்லது வேறு தோதான நடவடிக்கையை கருத்திற்கொள்ளப் படு வதற்காக, இவ்வழக்கு இசைபான அதிகாரி களுக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

1977 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க. நாடு கடத்தற் சட்டத்தை திருத்துதல்

8. 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகடத்தற் சட்டம், இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள முறையில் திருத்தப்படுகின்றது.

நாடு கடத்தல் ஒழுங்குகள் பற்றிய ஏற்பாடு

9. (1) இலங்கை அரசாங்கத்திற்கும் வேறு ஏதேனும் அரசின் அரசாங்கத்திற்கு மிடையே நாடுகடத்தல் ஏற்பாடொன்று வலுவிலிருக்குமிடத்து, அத்தகைய ஒழுங்கானது, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நாடுகடத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக சமவாயத்தில் வரைவலக்கணம் கூறப்பட்டவாறு சித்திர வதை என்னும் தவறு தொடர்பிலும் அத்துடன் சமவாயத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு சித்திரவதை என்னும் தவறைப் புரிய எத்தனித்தல், புரிய உடந்தையாயிருத்தல் ஒத்தாசை செய்தல் அல்லது புரியச் சூழ்ச்சி செய்தல் என்னும் தவறு தொடர்பில் நாடுகடத்தலுக்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியன்று இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் அரசுடன் செய்துகொள்ளப்பட்ட நாடு கடத்தல் ஒழுங்கு எதுவும் வலுவில்லாதவிடத்து, அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சமவாயத்தை இலங்கை அரசாங்கத்திற்கும் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம்

இலக்க. நாடுகடத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக சமவாயத்தில் வரைவிலக்கணம் கூறப் பட்டவாறு சித்திரவதை என்னும் தவறு தொடர்பிலும் அத்துடன் சமவாயத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு சித்திரவதை என்னும் தவறைப் புரிய எத்தனித்தல், புரிவதில் உடந்தையாயிருத்தல் அல்லது ஒத்தாசை செய்தல் அல்லது புரிவதற்கு சூழ்ச்சி செய்தல் என்னும் தவறு தொடர்பில் நாடு கடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் அரசின் அரசாங்கத்துடன் செய்துகொள்ளும் நாடு கடத்தல் ஒழுங்கொன்றாகக் கருதுதல் வேண்டும்.

வேறு அரசுகளுக்கு உதவி புரிவதற்கு அரசாங்கத்திற்குள்ள கடமை

10. அரசாங்கமானது ஏதேனும் அரசின் இயைபான அதிகாரிகளுக்கு அதன் வசமுள்ள ஏதேனும் இயைபான சாட்சியத்தை வழங்குதல் உட்பட சித்திரவதை என்னும் தவறு தொடர்பில், எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் அரசில் தொடரப்பட்ட குற்றவியல் நடவடிக்கை தொடர்பாக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குதல் வேண்டும்.

ஒவ்வாமை கோடல் ஏற் படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

12. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தலோவன்றி:—

சமவாயம் என்பது 1994 திசெம்பர் 10 ஆந் திகதி நியூயோக்கில் கைச்சாத்திடப்பட்ட சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் நடத்தப்படுதலுக்கு அல்லது தண்டிக்கப்படுதலுக்கு எதிரான சமவாயம் என்று பொருள்படும்.

"பகிரங்க அலுவலர்" என்பது குடியரசின் கீழ் கொடுப்பனவுக்காக ஏதேனும் பதவியை வகிக்கின்ற ஆளொருவர் என்று பொருள்படும்.

"சித்திரவதை" என்பது அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் ஓரினச் சொற்றொடர்களுடனும் வேறு எவரேனும் ஆளுக்கு உடற் சார்பிலாயினுஞ்சரி உளச்சார்பிலாயினுஞ்சரி, கடும் நோவை ஏற்படுத்தும் ஏதேனும் செயல் என்று பொருள்படும். இச்செயல்:—

(அ) பின்வரும் எவையேனும் நோக்கங்களுக்காக செய்யப்பட்டதும் அதாவது:—

1. அத்தகைய வேறு ஆளிடமிருந்து அல்லது ஒரு மூன்றாம் ஆளிடமிருந்து ஏதேனும் தகவலை அல்லது குற்ற ஒப்புதலைப் பெறுதல்;

11. அத்தகைய வேறு ஆள் அல்லது ஒரு மூன்றாம் ஆள் புரிந்துள்ள ஏதேனும் செயலு க்கு அவரைத் தண்டித்தல்; அல்லது

111. அத்தகைய வேறு ஆளை அல்லது ஒரு மூன்றாம் ஆள் அச்சுறுத்தல் அல்லது வற்புறு த்தல்;

(ஆ) பாரபட்சத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் காரணத்திற்காக செய்யப் பட்டதும்.

அத்துடன் ஒவ்வோர் விடயத்திலும், பகிரங்க அலுவலர் ஒருவரின் அல்லது அலுவலக முறையிலான தன்மையில் செயலாற்றும் வேறு ஆளின் தூண்டுதலின் பேரில் அல்லது சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் செய் யப்பட்ட ஒரு செயல் ஆகும்.

அட்டவணை (பிரிவு 7)
1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நாடுகடத்தற் சட்டத்தைத் திருத்துதல்.

1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க. நாடு கடத்தற் சட்டத்திற்கான அட்டவணை அதன் பாகம் ஆ என்பதற்கு நேர்முன்னர் பின்வ ருவதனை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

சித்திரவதை புரிபவர்கள் பிறப் பதில்லை......
அவர்கள் உருவாக் கப்படடு,
பயிற்றப்பட்டு,
உறுதுணையளிக்கப் பட்டவர்கள்.

ISBN 995-8929-01-08